விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 313 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 10 ஞாயிற்றுக்கிழமை (27.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### 30 பேர் கொண்ட குழுவினர்

# கரந்தனில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது கொடூரத் தாக்குதல்

**பெண் உட்பட மூவர் யாழ்.போதனாவில் அனுமதி**

(யாழ்ப்பாணம்)

30 பேர் கொண்ட குழுவினர் கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீர்வேலி கரந்தன் 19






# சசிகலா வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல்

(சாவகச்சேரி)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலை 19



# அடுத்த வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்

## தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



### திங்கள் முதல்

# யாழ் தேவி ரயில் சேவை ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மார்க்கத்திலான யாழ் தேவி தொடருந்து சேவை, நாளை திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளதாக 19

# தேர்தல் நடைபெறும் திகதியில் மாற்றம்?

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்காகக் குறிக்கப்பட்ட திகதி, இன்னும் ஓரிரு நாட்களில் மாற வாய்ப்புள்ளதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, தேர்தலுக்கு 19

### பருத்தித்துறையில்

# கிணற்றில் இருந்து 11 கைக்குண்டுகள் மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் பாவனையில் இல்லாத கிணற்றில் இருந்து 11 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது. 19

### திருநெல்வேலியில்

# தனித்திருந்தவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலியில் தனித்திருந்தவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் திருநெல்வேலி ஆடியபாதம் 19

# மரத்திலிருந்து தவறிவீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் உள்ள யாழ்.பல்கலைக்கழக கிளையில் பணிபுரிந்து வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரத்தில் இருந்து தவறிவீழ்ந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரி 19









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை
பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்த
பகுதியில் 09 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
வீடு கட்டவும், பயிர் செய்கைக்கும் ஏற்ற காணி.

தொடர்பு : (2507)

**076 4196 358**

## காணி விற்பனைக்கு உண்டு

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகா வித்தியாலயத்திற்கு பின்புறமாக 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நல்ல தண்ணீர்க் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100m

உரிமையாளர் தொடர்புகட்கு (2511)

**077 349 9465**

# உழவு இயந்திரம் மீது டிப்பர் மோதி விபத்து

## கேப்பாபிலவில் சம்பவம்

(நெளுக்குளம்)


கேப்பாபிலவு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட உழவு இயந்திரம் மீது டிப்பர் வாகனம் மோதிய விபத்து சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், வற்றாப்பளை கேப்பாபிலவு பகுதியில் வீதிக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தில் டிப்பர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்தை வயல் பகுதிக்கு அருகாமை நிறுத்திவிட்டு உழவியந்திர சாரதி வயலுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து வற்றாப்பளை நோக்கி வந்த டிப்பர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்ட உழவு இயந்திரத்துடன் மோதியுள்ளது. குறித்த விபத்து சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (6-8-299)

## இறுதிக் கிரியைகள் நடைபெறும் தினத்தில் மாற்றம்



**சின்னத்தம்பி இராசகோபாலன்**
**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)**

*27.10.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 28.10.2024 நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.* (485)

கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு. 077 761 2969

தகவல்: குடும்பத்தினர்

## வீடு வாடகைக்கு உண்டு

மனோகரா தியேட்டர்
அருகாமையில் நாவலர்
வீதியில் 06 அறைகள் கொண்ட
வீடு வாடகைக்கு விடப்படும்.
வியாபார நிலையங்கள்,
களஞ்சியமாகவும் பயன்படுத்தலாம்.

தொடர்பு : (2509)

**077 5189 775**

38 ஆவது வருட கல்விச் சேவையில்...

**யாழ். நகரின் No. 1 கல்வி நிறுவனத்தில்**

# O/L DAY CLASS

பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க...

**பிரிவு 2 ஆரம்பம் ⇨ 28.10.2024**
**திங்கள் காலை 08.00 - 01.15 வரை**

- யாழ். நகரின் "SUPER GRADE" ஆசிரியர் குழாம்.
- ஒவ்வொரு பிரிவிலும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதி.
- ஒவ்வொரு பாட கற்பித்தலின் இறுதியில் அலகுப் பரீட்சை.
- பிரிவு – 3 வெகு விரைவில்.
- அனுமதிகள் இன்று முதல்....

# நாவலர்

ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

(2514) தொடர்புகளுக்கு : 077 459 8440

## மணமகள் தேவை

1986 இல் பிறந்த இந்து
கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த தச்சு நிறுவன
முதலாளிக்கு வரன்
தேடப்படுகிறது. (2513)

**075 559 3232**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி
செருக்கப்புல ஒழுங்கைக்கு
அண்மையில் வீட்டுடன் காணி
விற்பனைக்கு. பார்வையிடும்
நேரம் : 09.00 - 04.00மணி வரை
தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு : (2361)

**077 3686 186**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.

(2512)

**070 168 3354, 070 668 3354**

## காணி விற்பனைக்கு

1. யாழ்.வெலிங்டன் சந்திக்கு அண்மையில் மின்சார நிலைய வீதியில் 1 1/2 பரப்பில் அமைந்த 04 மாடிக் கட்டடமும் 16 அறைகளும் கொண்ட காணித் துண்டும் விற்பனைக்குண்டு.
2. யாழ். மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.
3. யாழ்.மின்சார நிலைய வீதியில் 02 ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.
4. யாழ்.K.K.S வீதியில் வேணி களஞ்சியத்திற்கு அண்மையில் 100 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்ட 3 மாடிக்கட்டடம் விற்பனைக்குண்டு.
5. யாழ். ஸ்டான்லி வீதியில் 03 கடைகளும் விற்பனைக்குண்டு.
6. யாழ்.வைத்தியசாலை வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு முன்பாக 03 கடைகளும் விற்பனைக்குண்டு.
7. யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 1 1/2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
8. யாழ்.நல்லூர் கோயிலுக்கு அண்மையில் குறோஸ் வீதியில் 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
9. யாழ். K.K.S வீதியில் சிவன் கோயிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 06 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
10. யாழ். விக்டோரியா வீதியில் 16 பரப்புக் காணியும் 12 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
11. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 100 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 05 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.
12. யாழ்.மின்சார நிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்கு பின்னால் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும் விற்பனைக்குண்டு.
13. யாழ்.பிறவுண் வீதியில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
14. யாழ்.சிவன் கோயிலுக்கு பின் வீதியில் மானிப்பாய் வீதியில் 05 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.
15. ஆனைக்கோட்டை உயரப்புலம் 06 பரப்புடன் வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

(C-1462)

**T.P : 077 723 2535**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் காப்பெற் வீதி 150 மீற்றர் தூரம்.
- நல்ல சூழல் குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.

(2512)

**077 468 3354, 077 288 0152**

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை.

கிளிநொச்சியில் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு தங்குமிடம் வழங்கப்படும்.

- **விற்பனை பிரதிநிதி** : கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்(ஆண்)
- **அலுவலக முகாமையாளர்** : கணனி அறிவுடையவர்கள்(ஆண், பெண்)
- **விற்பனையாளர்கள்** : ஆண், பெண்
- **கணக்குப்பதிவாளர்** : ஆண், பெண் (கணனி அறிவுடையவர்கள்)

மேற் குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்

(C-1453)

தொடர்புகளுக்கு : **077 743 5265**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு அரிசியை விற்றால் சட்ட நடவடிக்கை

## எச்சரிக்கை விடுக்கும் வர்த்தக அமைச்சு

(கொழும்பு)

**அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையினை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

சந்தையில் நிர்ணய விலைக்கு அமைவாக அரிசி விற்பனை செய்யப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் எம்.எம் நயிமுதீன் தெரிவித்துள்ளார்.

அரிசி விலை தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் குறித்து விவசாய அமைச்சு மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் முற்பகல் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் பின் கருத்துத் தெரிவித்த வர்த்தக அமைச்சின் செயலாளர், அரிசி ஆலை உரிமையாளர்கள் 218 ரூபாவுக்கு நாட்டரிசியை சந்தைக்கு விநியோகிக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி நாட்டரிசியை 220 ரூபாவுக்கு விற்பனை செய்ய நிர்ணய விலை அறிவிக்கப்பட்டது.

நிர்ணய விலையை மீறி அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

### உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

நாடு முழுவதும் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருவதால் உப்பு உற்பத்தி தடைப்பட்டுள்ளதால் தேவைக்கு ஏற்றவாறு விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புத்தளம், பாலாவி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு, கடந்த சில மாதங்களாக அப்பகுதிகளில் மழை பெய்து வருவதால் உப்பு உற்பத்திக்கு தேவையான அளவு சூரிய வெளிச்சம் கிடைக்காமையினால் உப்பு உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

மேலும், சீரற்ற காலநிலை தொடருமானால் போதியளவு உப்பை சந்தைக்கு விநியோகிக்க முடியாது என பாலாவி உப்பு உற்பத்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரணசிங்க பண்டார தெரிவித்துள்ளார். (நி-8)

### இலங்கை கடற்படையால்

## கைது செய்யப்பட்ட மீனவர்களை

### விடுவிக்கக்கோரி இராமேஸ்வரத்தில் போராட்டம்

(சென்னை)

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுதலை செய்யக்கோரி இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இராமேஸ்வரம் பேருந்து நிலையம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.



விசைப்படகு சங்கத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் மீனவ அமைப்புக்கள் கடற்றொழிலாளர்களின் குடும்பத்தினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 23 ஆம் திகதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற இரண்டு விசைப் படகு மற்றும் அதில் பயணித்த 16 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு தற்போது இலங்கையின் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரியும் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு இலங்கை அரசு அரசுடைமையாக்கிய விசைப்படகுகளுக்கு மத்திய மாநில அரசு இழப்பீடு வழங்க கோரியும், இழப்பீடு வழங்காத மத்திய மாநில அரசைக் கண்டித்தும் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

### பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் இன்று முதல் தபால்மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

பொதுத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளதுடன் வாக்கெடுப்புக்கான சகல பணிகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு நிறைவு செய்துள்ளது.

இதற்கமைய இம்முறை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் 5,464 வேட்பாளர்கள், சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 3357 வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 8821 பேர் போட்டியிடுகின்றனர்.

இம்முறை பொதுத்தேர்தலில் தபால்மூல வாக்களிப்புக்கு 759,210 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற நிலையில் 2,1160 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் 738,050 அரச உத்தியோகஸ்தர்கள் தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ளனர்

மேலும் தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.


அத்துடன் நவம்பர் மாதம் 1 மற்றும் 4 ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையில், இத்தினங்களில் வாக்களிக்காதவர்கள் நவம்பர் மாதம் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
08
01
1933



இறப்பு
26
10
2024

## திருமதி கனகாம்பிகை வைத்தியநாதன்

சுவாமியார் விதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை வைத்தியநாதன் அவர்கள் நேற்று (26.10.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதன் (ஓய்வுபெற்ற மீன்பிடி லாகா இலிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சபாநடேசர் - இரத்தினவல்லி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான துரைசாமி- மாணிக்கவல்லி தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ரோகிணி, வரதராசன் (கனடா), இந்திராணி பிரியதர்சினி (லண்டன்), காலஞ்சென்ற தில்லைராசன் (கனடா), குமுதினி (கனடா), சவுந்தரராசன் (லண்டன்), திருவருட்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தகுமார், கலாவாணி (கனடா), சுந்தரதாசன் (லண்டன்), இராஜலட்சுமி (கனடா), மகேந்திரன் (கனடா), மாணிக்கவசந்தினி (லண்டன்), சற்குருநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மனோன்மணி, சபாநாதன், அருளாம்பிகை மற்றும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகரட்ணம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மங்கையற்கரசி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், இராமச்சந்திரன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனோஜன் - சுபாஷினி, ஆரணி - நிரோசன், ஆரபி - நிதர்சன், அஜந்தன், ரேவதி, அஸ்ஷினி, லவண் - அபர்ணா, அருணன் - சித்ரா, அருந்ததி - குகரூபன், ஜனனி, யாதவன், கன்னிகா, மதிபன், மதீரன், சபீரன் - அனுசியா, திவ்வியன், லக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆத்விகன், பானுகவி, வைதேகி, வேலவன், கதிரவன், கைலாஸ், கயலினி ஆகியோரின் ஆசைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.10.2024 (திங்கட்கிழமை) மதியம் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 3 மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்

52, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 205 1104
077 652 5656 (சாந்தகுமார்)
+44 7969872383 (சுந்தரதாசன்)
+ 44 7852314837 (சவுந்தரராசன்)

(2515)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் இயல் இசைவாரிதி பிரம்மஸ்ரீ ம.த.ந.வீரமணி ஐயரை நினைவுறுத்தி நடை பெற்ற நினைவரங்க நிகழ்வு கடந்த புதன்கிழமை ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவி கமலக் கண்ணன் மைதிலி தலைமை யில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)



கீரிமலை நகுலேஸ்வரப்பெருமானுக்காக லண்டனில் இருந்து கொண்டுவரப்பட்ட காண்டாமணிக்கான விசேட பூஜை வழிபாடுகள் நேற்று சனிக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்றது.
(படம்- சிவசாந்தன்)


நீர்க்கசிவை தடுப்பதற்கு




உலகத்தரம்மிக்க கட்டட இரசாயனப் பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
போலிகளைக்கண்டு ஏமாறவேண்டாம்
45000 36Kg MasterSeal- 540, பரலாஸ்ரிக்
(2505)
North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com
FINEX



பாராளுமன்றத்தேர்தல் 2024
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
வைத்திலிங்கம் குகதாஸ்
B.A (COL), PGDM (SJ), PGDM (RU), SLACS CLASS I
ஓய்வுநிலை கணக்காய்வாளர் (வட மாகாணம்)



8 X
அகில இலங்கை தமிழர் மகா சபை


# தமிழ் மக்கள் கூட்டணி யாழில் பிரசார நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கூட்டணியினரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நேற்று யாழ் நகரில் முன்னெடுக்கப்பட்டது.

நகரப்பகுதியில் தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு பொது மக்களிடம் ஆதரவு கோரப்பட்டது.

இதன்போது தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் வி.மணிவண்ணன், வ.பார்த்திபன், மிதிலைச் செல்வி பத்மநாதன் உள்ளிட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (6-8-33)




6

சந்திரகாசன்
இளங்கோவன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களை ஒன்றிணைத்து தாயகத்துத் தமிழர்களின் வாழ்வை பொருளாதார ரீதியாக மேம்படுத்த சட்டத்திற்கமைவாக திட்டங்களை வகுத்து அதை நடைமுறைப் படுத்துவேன்.



## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

உங்கள் உதிரத்தால் உயிரைக் காக்கும் உன்னத பணிக்கு ஒன்று படுவோம் எனும் தொனிப் பொருளில் பொலி கண்டி குழந்தை இயேசு ஆலய இளையோர் மன்றத்தினால் நடத்தப்படும் இரத்ததான முகாம் இன்று இடம்பெறும்.


காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரை பொலிகண்டி குழந்தை இயேசு ஆலயத்தில் இடம்பெறும் குறித்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்களை கலந்து கொண்டு குருதித் தானம் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-4)


அடையாளம் மாறாத அரசியல் மாற்றம்
X 9



தேசத்தின் எழுச்சிக்காக...
சுகிர்தன்
முன்னாள் மாகாணசபை உறுப்பினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கைதடி சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு யாழ். இந்திய துணைத் தூதுவரினால் ஆயுர்வேத மருந்துகள் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

# வளவாளர்களுக்கான நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கலாசார மத்திய நிலையத்தில் 2025 ஆம் ஆண்டின் கீழ் வரும் பாடநெறிகளை (பகுதி நேரமாக கற்பிப்பதற்காக) கற்பிப்பதற்கான கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், பரத மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக் கலை, நாடகமும் அரங்கியலும், மிருதங்கம் போன்ற பயிற்சி நெறிகளுக்கு வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

சங்கானைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை (தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக) எதிர்வரும் 06.11.2024 ஆம் திகதிக்கு முன்னதாக "கலாசார மத்திய நிலையம், பட்டினசபை வீதி, சங்கானை" எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்க முடியும். மேலும் நேர்முகத் தேர்வுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என சங்கானை கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி பொ.சிவராஜசிவம் அறிவித்துள்ளார். (6-8)

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக 2025 ஆம் ஆண்டின் திறமை மேம்பாட்டு நிகழ்ச்சியை முன்னிட்டு சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலைய வளவாளர்களை தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், மிருதங்கம், நாடகமும் அரங்கியலும், சித்திரம், கீ போர்ட் போன்ற பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிநேரமாக கற்பிக்க ஆர்வமுள்ள ஆசிரியர்கள் தங்களது சுயவிபரக் கோவையினை தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக எதிர்வரும் 08.11.2024 இற்கு முன்னர் சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம், ஐயனார் கோவிலடி, வடலியடைப்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யாழினி வினோத்குமார் அறிவித்துள்ளார். (6-8)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குபட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (6)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 28.10.2024 | மு.ப 9.00- மு.ப.11.00 | சனசமூக நிலையம் ஆறுகால்மடம் |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | செழியன் வீதி |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | புதிய குடியிருப்பு சனசமூக நிலையம் |
| 29.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | R.C பாடசாலை நாவலர் வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | ஆசாத் வீதி |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | 1 ஆம், 2 ஆம்,3 ஆம் குறுக்குத்தெரு நாவலர் வீதி |
| 30.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | சேமக்காலை வீதி , கெனடி வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | ஜின்னா வீதி |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | சனசமூக நிலையம் வசந்தபுரம் |
| 01.11.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | சனசமூக நிலையம் சூரியஒளி |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | சனசமூக நிலையம் சென் நீக்கிலாஸ் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | கோவில் ஒழுங்கை நாவாந்துறை |
| 04.11.2024 | மு.ப.9.00 - மு.ப. 11.00 | காதி அபூக்கர் வீதி நாவாந்துறை |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | சனசமூக நிலையம் கண்ணாபுரம் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | கற்குளம் நாவாந்துறை வெள்ளாந்தெரு நாவாந்துறை |
| 05.11.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி சந்தி |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | கோணந்தோட்டம் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | சோலைபுரம் |

# நாகர்கோவில்-எழுதுமட்டுவாழ் வீதிப்பாலம் புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாழ் செல்கின்ற வீதியிலுள்ள பிரதான பாலத்தை புதிதாக புனரமைக்கும் பணியினை வடமாகாண ஆளுநர் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, பகுதி கிராம சேவையாளர், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், துறைசார் பொறியியலாளர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

, குறித்த வீதியை பயன்படுத்த முடியாமை காரணமாக சுமார் 7 கிலோமீற்றர் தூரத்திலுள்ள எழுதுமட்டுவாழ் சந்திக்கு செல்வதற்கு மருதங்கேணி, புதுக்காடு ஊடாக சுமார் 40. கிலோமீற்றர் தூரம் சுற்றி மக்கள் பயணித்துக் கொண்டிருந்தனர்.

சுமார் மூன்று ஆண்டுகளாக குறித்த பாலத்தின் புனரமைப்பு பணி தடைப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த பாலத்திற்கான புனர்மைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (6-8)

# புனரமைப்பு வேலை பணியினை ஆராய்ந்த

## யாழ்.மாவட்ட பதில் அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலப் புனரமைப்பு வேலையினை நேரில் சென்று ஆராய்ந்த யாழ்: மாவட்ட பதில் அரச அதிபர்.

கேரதீவு சங்குப்பிட்டிப் பாலப் புனரமைப்பு வேலைகளை நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் நேரடியாக பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றத்தினைக் கேட்டறிந்து கொண்டார். (6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் வான் பாதுகாப்புக் கவசங்கள் எப்படிச் செயற்படுகின்றன?



(சென்றவாரத் தொடர்ச்சி...)

இந்த எச்சரிக்கை கிடைத்த அடுத்த நொடியே அயர்ன் டோமில் இணைக்கப் பட்டிருக்கும் ஏவுகணைகள் வானில் பாய்வதற்குத் தயாராகிவிடும். ஆம், முள்ளை முள்ளால் எடுக்கும் பழமொழி போல ஏவுகணைகளை வானிலேயே ஏவுகணைகளால் தாக்கி வீழ்த்துவதுதான் அயர்ன்டோமின் வேலை. இதற்காக டாமிர் (Tamir) என்ற ரகத்தைச் சேர்ந்த இடைமறித்துத் தாக்கும் ஏவுகணை அயர்ன் டோமின் ஒரு பாகமாக இணைக் கப்பட்டுள்ளது. கன்ட்ரோல் சிஸ்டம் இதைத் துாண்டிவிடும். ரேடாருக்கும் டாமிர் ஏவுகணைகளுக்கும் இடையே இருந்து தகவல் பரிமாறும் கருவியாக கன்ட்ரோல் சிஸ்டம் செயற்படுகிறது.

### வானில் அட்டாக் எப்படி நடக்கிறது?

பொதுவாக ஒரு ரொக்கெட் அல்லது ஏவுகணையில் அதிக சேதம் ஏற்படுத்தும் வெடிபொருளானது அதன் முன்புற முனையில் வைக்கப்படும். லேசர் மூலம் கட்டுப்படுத்தப்படும் ஒரு ஃபியூஸ் இதை வெடிக்கச் செய்யும். இலக்கை நெருங்கியதுமே இந்த லேசர் செயற்பட்டு வெடிபொருளை வெடிக்கச் செய்யும். அதனால்தான் பேரழிவு ஏற்படுகிறது.

அந்த ஏவுகணையை வானில் இடைமறித்து அழிக்கச் செல்லும் டாமிர் ஏவுகணையும் இதேபோலவே செயற்படுகிறது. ஆனால், அதில் கூடுதலாக வேறு சில வெடிபொருட்களும் இருக்கும். ஒலியை விட வேகமாகச் செல்லும் ஒரு ஏவுகணையின் பாதையைத் துல்லியமாகக் கணித்து அதே வேகத்தில் இன்னொரு ஏவுகணையை அனுப்பி அதன்மீது மோதுவது என்பது மிகவும் சிக்கலான விடயம். வரும் ஏவுகணையை முன்புறமாக மோதியும் தாக்கலாம் பின்பக்கமாகச் சென்று மோதியும் தாக்கலாம் குறுக்கே சென்றும் தாக்கலாம். ஏவுகணை எங்கிருந்து வருகிறது, அயர்ன் டோம் சிஸ்டம் எங்கிருந்து அதை இடைமறிக்கிறது என்பதைப் பொறுத்து எப்படித் தாக்கலாம் என்பதை டாமிர் ஏவுகணை முடிவு செய்துகொள்ளும். அதன்பின் மேலே பாயும்.

டாமிர் ஏவுகணையின் முன்பக்கத்தில் சக்திவாய்ந்த சென்சார்கள் இருக்கும். எதிரி ஏவுகணையை நெருங்கிவிட்டதை டாமிர் ஏவுகணை உணர்ந்ததும், அதில் இருக்கும் சென்சார்கள் செயற்பட்டு வெடிபொருட்களைத் தூண்டிவிடும். உடனே டாமிர் ஏவுகணை வெடிக்கும். அதிலிருந்து ஏராளமான உலோகத் துண்டுகள் சிதறி எதிரி ஏவுகணை மீது பாயும். அதில் ஏதாவது ஓர் உலோகத் துண்டு அந்த ஏவுகணையின் தலைப்பக்கம் இருக்கும் வெடிபொருட்களை வானிலேயே வெடிக்கச் செய்து அழித்துவிடும்.

இந்த அயர்ன் டோம் சிஸ்டம் ஒன்றின் விலை, ஐந்து கோடி அமெரிக்க டொலர். இதில் இருக்கும் ஒவ்வொரு டாமிர் ஏவுகணையும் சுமார் 80 ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்புள்ளது.

### டேவிட்ஸ் ஸ்லிங் தடுப்பு வளையம்!

இந்த செபரெம்பர் மாதம் ஹிஸ்புல்லா அமைப்பினர் லெபனான் நாட்டின் எல்லையிலிருந்து வலுவான ஏவுகணை ஒன்றை வீசி இஸ்ரேலைத் தாக்கினர்.

(தொடரும்...)

# மனித ரோபோ

அமெரிக்காவில் அனைத்து பணிகளையும் செய்யும் மனித ரோபோக்களை டெஸ்லா நிறுவனம் அறிமுகம் செய்தது. டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் மனிதர்களுக்கு சிறந்த நண்பராக இருக்கும் வகையிலான ரோபோக்களை உருவாக்கியுள்ளார். அவரது நிறுவனத்தின் இந்த ரோபோக்கள் வீட்டை சுத்தம் செய்வது, தோட்ட வேலைகள் செய்வது என அனைத்து வேலைகளையும் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் இந்த மனித ரோபோக்கள் அறிமுகம் செய்யப்பட்டன. "இந்த மனித ரோபோக்களால் நாம் விரும்பும் அனைத்து வேலைகளையும் செய்ய முடியும். இவற்றால் பேச முடியும், நடனமாட முடியும், குழந்தைகளை கவனித்துக்கொள்ள முடியும். அவர்களுடன் விளையாட முடியும், நாய்களை நடைப்பயிற்சி அழைத்துச் செல்ல முடியும்.

மேலும் தோட்ட வேலைகள், வீட்டை சுத்தம் செய்தல், கடைக்குச் சென்று சாமான்கள் வாங்குதல் உள்ளிட்ட வேலைகளையும் செய்யும். மனிதர்களுக்கு சிறந்த நண்பனாக இருக்கும் இந்த ரோபோவின் விலை 20,000 முதல் 30,000 அமெரிக்க டொலர்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 465
Viber 076 636 3378



# தமிழினத்தின் நம்பிக்கையை தகர்த்தெறிந்து விடாதீர்கள்!

இது தேர்தல் காலம். 2009 இற்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும் போது நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தல்களில் மக்கள் அவ்வாஞ்சை காட்டுவது போலத் தெரியவில்லை.

காலம் காலமாக ஆட்சியாளர்களே எம்மை ஏமாற்றிக் கொண்டிருந்தனர். ஆனால் எம் அரசியல் தலைமைகளும் எம்மை ஏமாற்றுகின்றது என்ற உண்மையினை தமிழ் மக்கள் நன்கு புரிந்து விட்டனர்.

தேர்தல்கள் மீது தமிழ் மக்கள் வெறுப்புக் கொண்டதற்கான மிக முக்கியமான காரணமாக மேற்குறித்த விடயம் இருக்கிறது. இந்த உண்மையினை எவரும் மறந்து விட முடியாது. மாறாக எவரும் மறுப்பாராக இருந்தால் அது முழுப்பூசணிக்காயினை சோற்றில் மறைத்ததற்கு ஒப்பானதே.

தேர்தல் காலங்களில் வேட்பாளர்களினால் அரசியல் கட்சிகளினால் வெளியிடப்படும் வாக்குறுதிகளின் படி வென்ற பின் குறித்த வேட்பாளர்கள் நடக்கின்றனரா எனின் அதன் முடிவு மிகப் பாதகமானதாகவே இருக்கும்.

ஏதோ ஒரு வகையில் அரசிடமோ, பெரும்பாண்மை சக்திகளிடமோ அடிபணிந்து செயலாற்றுவதைக் கண்ணூடாகக் காண முடியும். பாராளுமன்றப் பதவி நிலை என்பது மக்கள் பணிக்கான பதவியாகவே இருக்கிறது. அதை வியாபாராமாகப் பார்க்கும் நிலை இருக்கும் வரை மக்கள் பிரச்சினை மன்றம் ஏறாது.

அதற்கு எம் மக்கள் பிரதிநிதிகள் மனச்சுத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொண்டாலே மக்கள் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருந்தாலும் அவை வெளிக் கொணரப்பட்டதாய் இருக்கும்.

அல்ல அற்ப சொற்ப சலுகைகளுக்காக மக்கள் பிரச்சினைகளைக் கண்டும் காணாததுமாய் விடும் நிலையே இன்றைய ஐதார்த்தமாகி. விட்டது. ஒரு திரைப்படத்தில், "இங்கு பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை. இன்னொரு பிரச்சினை வந்தாலே போதும். முதலாவது பிரச்சினையைக் கைவிட்டு விட்டு அடுத்த பிரச்சினையைத் தூக்கிப் பிடிக்கத் தொடங்கி விடுவோம்" என்று கூறுவார் ஒருத்தர்.

இதுபோலத்தான் இன்றைய எமது அரசியல் களமும் காட்சி தான் தமிழினத்தின் காவலர்கள் என்று பக்கம் பக்கமாய் வசனம் பேசவும் போஸ்டர் அடித்து வெளியிடவும் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்பது தான் வேதனை.

அண்மையில் ஓர் அன்பரைச் சந்தித்தேன். ஒரு துண்டுப்பிரசுரத்தைத் தந்து விட்டு இம்முறை நான் தேர்தலில் நிற்கின்றேன் என தனது சின்னத்தைக் கூறி எனக்கு வாக்களிக்கும் படி கேட்டுக் கொண்டார்.

நானும் இன்முகத்துடன் அதை ஆமோதிப்பதுபோல அவரின் துண்டுப்பிரசுரத்தை பௌவியமாகப் பெற்றுக் கொண்டேன்.

இராமாயணத்தில் இராமரைச் சந்திக்கச் சென்ற வேடுவன் குகன் தேனில் ஊற வைத்த மீனை இராமருக்கு கொடுப்புதற்காக எடுத்துச் சென்று கொடுத்தான். இராமர் சுத்த சைவர். அசைவம் உண்ணாதவர். ஆயினும் "எனக்கு மீன் என்றால் பிடிக்கும் அதிலும் தேனில் ஊற வைத்த மீன் என்றால் மிகவும் பிடிக்கும் என்று இன்முகத்துடன் அந்த மீனை வாங்கிக் கொண்டார்" இதுவே அப்போது எனக்கு நினைவில் வந்தது.


சுதாகரித்த நான் ஏன் முன்பு இருந்த கட்சியில் கேட்கவில்லையா? என்றேன். நாம் ஒரு சிலரை சிபார்சு செய்தோம். அவர்களைக் கட்சி போட்டியிட தெரிவு செய்யவில்லை. ஆதலால் நாம் தனித்துக் கேட்க முடிவெடுத்தோம் என்றார்.

போட்டியில் அநேகரின் கருத்தும் இதுவாகவே காணப்படுகின்றது.

மக்களுக்கு தேர்தல் தொடர்பில் ஏற்படும் வெறுப்பும் அக்கறையீனமும் பாரதூரமான விளைவுகளையே தரும். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 7 ஆசனங்களாக இருந்த யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் ஆசனங்கள் இம்முறை 6 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இம்மியும் கவலை கொள்ளாத எம் அரசியல் சாணக்கியர்கள் எப்படியாவது அதில் ஒன்றாய் நான் இருக்க வேண்டும் என்ற முனைப்பில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழினம் கொத்துக் கொத்தாய் கொன்றொழிக்கப்பட்ட போது வாய்மூடி மௌனமாய் இருந்த எம் அரசியல்வாதிகள் இன்று தமிழ்தேசியம் பற்றியும், தமிழர் உரிமைகள் பற்றியும் பேசும் போது வேடிக்கையாக இருக்கின்றது.

அட இவர்களுக்கா நாம் வாக்களித்தோம்? எமது பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என்று இவர்களையா பாராளுமன்றம் அனுப்பினோம்? என்று எண்ணிப் புழுங்குவதை விட



தருகிறது. உண்மையான நேர்மையான அரசியல்வாதிகளைத் தேடிப் பிடிக்கும் நிலையே இன்று இருக்கிறது என்பது வருத்தம் தரும் ஒரு விடயம். கொண்ட கொள்கை மாறாமல் தன் நாட்டு மக்களுக்காய் உயிரையும் துச்சமென மதித்துப் போரிட்ட இனமொன்று இன்று சுயம் இழந்து நல்ல தலைவனுக்காய் ஏங்கிக் கிடக்கிறது.

இதோ இவர் தான் எமது தலைவர் எனக் கை காட்டுவதற்கு யாரும் இல்லை. ஆனால் நாம் வேறு எதை தமிழினத்தினால் செய்துவிட முடியும்.

இலங்கை வரலாற்றில் ஒரு இடதுசாரிக்கட்சி ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது.

அத்துடன் ஊழலுக்கு எதிரான அரசு என்று தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறது. இந்த வேளையில் நாம் ஓடோடிப் போய்; ஐயா! இதுவரை காலமும் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு முடிவு கட்டுங்கள். தமிழினத்தை திட்டமிட்டு அழித்தவர்களை இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துங்கள். சூறையாடப்பட்ட தமிழர் பிரதேசங்களையும், வளங்களையும் மீண்டும் பெற்றுத் தந்து எம் இனம் நிம்மதியுடனும் சுதந்திரத்துடனும் வாழ வழி செய்யுங்கள் என்று கேட்பார்கள் என்று எண்ணிணோம்.

ஆனால் நடந்ததோ, மரியாதைக்குரிய ஜனாதிபதி அவர்களே மதுபானசாலைக்கு அனுமதி எடுத்தவர்கள் யார், யார் என்பதை உடன் வெளியிடுங்கள். இதுவே எம்மவர்களின் அரசிடம் கோரப்பட்ட கோரிக்கை.

இப்படியாக நிலை இருந்தால் இந்த ஜென்மம் அல்ல இன்றும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் தமிழினத்தின் பிரச்சினை தீராது.

மாறாக தமிழினத்துக்கு வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுக்கான பிரச்சினை மதுபானசாலைகளுக்கு அனுமதி பெற்று அதைத் திறப்பதே என்று எமது ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் திசை திருப்ப இவை ஏதுவாக அமைந்துவிடும்.

எம் அன்பார்ந்த வேட்பாளப் பெருமக்களே, தமிழினம் கடந்து வந்த பாதை வலிகளும் இழப்புக்களும் நிறைந்த பாதை. வெளியே சிரித்து மகிழ்ந்தாலும் தமிழினத்திடம் உள்ளூற ஏதோ ஒரு விடயம் அச்சத்தை ஏற்படுத்துகின்றதாயே உள்ளது.

இவற்றைச் சரிசெய்ய வேண்டியது உங்களின் தலையாய கடமை. தயவு செய்து இதைச் சரி செய்ய முனையுங்கள். அத்துடன் தமிழினம் ஒற்றுமையாக அனைவரும் நிற்பதையே விரும்புகிறது. அதையே பலம் எனக் கருதுகிறது. இதை உணர்ந்து செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கை இப்போதும் அவர்கள் மனங்களில் எங்கோ ஒரு மூளையில் இருக்கவே செய்கிறது.

**அபிமன்யு**

> **“ இங்கு பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை. இன்னொரு பிரச்சினை வந்தாலே போதும். முதலாவது பிரச்சினையைக் கைவிட்டு விட்டு அடுத்த பிரச்சினையைத் தூக்கிப்பிடிக்கத் தொடங்கி விடுவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனிதன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் இது பற்றி வியாசரின் கருத்து?

**பிரணவன் நீர்வேலி**

**கௌரவம் என்பதற்கான விளக்கத்தைத் தரமுடியுமா வியாசரே?**

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஒரு நாள் கூட பொய்யுரைக்காமல், அடுத்தவரை தட்டிச் சுத்தாமல், மற்றவர்களுக்கு துரோகம் இழைக்காமல் உண்மை, நேர்மை எனும் பாதையில் அறநெறி தவறாமல் வாழ்வானாயின் அவனே கௌரவமான மனிதன்.

ஆனால் இன்றைய உலகில் பணம், பதவி, பட்டம், அந்தஸ்து என்பனவே கௌரவத்தைத் தீர்மானிக்கிறது.

ஒருவன், உலகில் மனிதனால் செய்ய முடியாத கெட்ட வேலைகளை எல்லாம் செய்வான். ஆனால் அவனிடம் பணம், பதவி இருக்கிறது எனின் அவன் இந்தச் சமூகத்தில் கௌரவமானவனாக மதிக்கப்படுகிறான். இன்றைய உலகில் கௌரவத்தைத் தீர்மானிப்பது நற்குணம் அல்ல.

பணமும் பதவியும் மட்டுமே. இதுதான் மனித வாழ்க்கை. இதை நோக்கித்தான் மனிதன் மரண வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றான்.

**வேலன் யாழ்ப்பாணம்**

**மரண ஊர்வலங்களில் வீதிகளில் வெடி கொழுத்துவதைத் தடை செய்ய முடியாதா வியாசரே?**

மரண நிகழ்வு என்பது எம்முடன் அன்பாய் பண்பாய், ஒன்றாய் இருந்த ஒருவர் இவ்வுலகை விட்டுப் பிரியும் துயர் நிகழ்வு.

இந்தத் துயர் நிகழ்வில் வெடி கொழுத்தி ஆர்ப்பரிக்கும் கலாசாரம் எப்படிப் புகுத்தப்பட்டது என்றே தெரியவில்லை.

ஊரில் ஒருவர் மரணித்தால் வெடி கொழுத்திக் கொண்டாடவும் சந்திக்குச் சந்தி மணித்தியாலக் கணக்கில் பறை மேளம் முழங்க ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம்.

இது எந்த வகையிலும் மனிதாபிமானம் அன்று. இறந்தவரின் நெருங்கிய உறவுக்காரர் நாம் என்று; ஒரு நாள் நினைத்துப் பாருங்கள். நீங்கள் செய்த அறமற்ற வேலையை நினைத்து நொருங்கிப் போய்விடுவீர்கள்.

என்னைப் பொறுத்தவரை மரணச்சடங்கிற்கு வெடி கொழுத்துபவரைப் பிடித்து வெழுப்பதே சரியான தண்டனை என்று நினைக்கிறேன்.

**சுந்தரம் துன்னாலை**

**தேர்தலில் அதிகமானோர் போட்டியிடுகின்றனர் இதனால் பயன் ஏதும் உண்டா வியாசரே?**

குப்பைத் தொட்டியினுள் கொட்டிக் கிடக்கும் உணவினால் மனிதனுக்கு ஏதும் பயன் இருக்கிறதா? அது போலத்தான் இதுவும்.

தேர்தலில் போட்டியிடும் அநேகரை அடியேன் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

போட்டியிடும் அனைவரும் நான் வெல்வேன் என்ற அசாத்திய நம்பிக்கையில் இருக்கிறார் கள். ஆறு ஆசனங்க்ள். இதில் அவரின், இவரின், உவரின் என்ற மூன்று வெற்றிகளைக் கழித்தால் மூன்று ஆசனங்கள் மீதி. அந்த மூன்றிற்கும் 393 பேர் போட்டியிடுகிறார்கள் என்பது தான் வேடிக்கை.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**இந்திரஜித் மாதகல்**

**தனிமையின் கொடுமையை புரியாதவர்களை என்னவென்று கூற வியாசரே?**


இந்த வேதனையினை அநேகர் உணர்வதும் இல்லை, புரிந்து கொள்வதும் இல்லை. தனது குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயல் தேசம் சென்று கடும் உழைப்பு உழைக்கும் ஒவ்வொருவரின் மனதிற்குள்ளும் தனிமையின் கொடுமை குமுறிக் கொண்டே இருக்கும்.

பெற்று வளர்த்த பிள்ளை இறுதிக் காலத்தில் தாய், தந்தையரை அநாதை இல்லத்தில் விட்டுச் சென்று விட மனதினால் புழுங்கித் தவிக்கும் பெற்றோரின் நெஞ்சம் தனிமையின் கொடுமையை அனுபவித்துக் கொண்டே இருக்கும்.

உயிருக்கு உயிராய் நேசித்தவள் ஏதோ ஒரு காரணத்திற்காக விட்டுச் சென்று விட அவளை மறக்க முடியாமல் தவிக்கும் தலைவனின் உள்ளக் கிடக்கை தனிமையின் கொடுமையை அனுபவித்துக் கொண்டே இருக்கும்.

நட்புடன் பழகிய நண்பன் தனக்குச் செய்த துரோகத்தை நினைத்து அவன் பிரிவை ஏற்க முடியாமல் வெம்மும் நட்பின் இதயத்திற்கு தனிமையின் கொடுமை புரிந்து விடும்.

இவ்வாறு பலவற்றை கூறிக் கொண்டு போகலாம். வாழ்வில் கொடுமையிலும் கொடுமை இந்த தனிமையின் கொடுமையே.



மரண ஊர்வலங்கள் வீதிகளில் வெடி கொழுத்துவதைத் தடை செய்ய முடியாதா வியாசரே?

**இளங்கோ மானிப்பாய்**

**புதிய மாற்றம், தமிழ் தேசியம், அபிவிருத்தி எனப் பலவிதமாய்க் கதைப் போரில் யாரை நம்புவது வியாசரே?**

தொட்டிகள் பல விதமாக இருந்தாலும் அதில் ஊறும் மட்டைகள் அனைத்தும் ஒரே விதமானதே. இதைப் புரியாதவரை வாக்காளர் ஆகிய நாம் ஏமாந்து கொண்டு தான் இருப்போம்.

எங்கே, தேர்தலில் நிற்கும் ஒருவர் கையைத் தூக்கட்டும் பார்ப்போம். நான் மக்கள் நலனுக்காவே நிற்கின்றேன் என்று.

அப்படி வருபவர் யாராவது இருந்தால் வியாசரை சந்தியுங்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் சென்று கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்து பார்க்கலாம்.

மக்கள் எக்கேடு கெட்டுப் போனால் என்ன. எமக்குத் தேவை வெற்றி. அந்த வெற்றிக்காய் ஒன்றல்ல, இரண்டல்ல, நூறல்ல, ஆயிரமல்ல கோடான கோடி பொய்யுரைக்கவும் நாம் தயார் என்பதே அவர்களின் நிலை.

**மகாலட்சுமி கொக்குவில்**

**அனைத்தும் யாம் அறிவோம் எனும் கடவுளின் திருவாக்கு தனி ஒரு வாக்காகப் பிரிந்து விட்டது போலத் தெரிகிறதே?**

கோவில்களில் கண்காணிப்புக் கமரா பூட்டுவதற்கு எப்போது முனைந்தோமோ அப்போதே கடவுள் என்ற ஒப்பற்ற ஒருவனை நம்பவில்லை என்றாகிவிட்டது.

ஆடாத ஆட்டமெல்லாம் போட்டாலும் இறைவன் தீர்ப்பு என்ற ஒன்று உண்டு.

அந்தத் தீர்ப்பு மிக மோசமானதாகவே இருக்கும். நீங்கள் படுத்திருக்கும் கட்டிலைச் சுற்றி வித விதமான உணவுகள் படைக்கப்பட்டிருக் கும். அதில் ஒரு வாய் எடுத்து வைக்கக் கூட உங்கள் கைகள் இயங்காது.

நா வறண்டு தாகம் எடுக்கும். குவளை நிறைய நீர் இருக்கும். ஆனால் அந்த நீரைக் குடித்து தாகம் தீர்க்க முடியாது. அது வெறும் கானல் நீராகவே இருக்கும்.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு. அந்த சக்தியே இறை சக்தி. அதை எவராலும் மறுத்துவிட முடியாது.

**மகிந்தகுமார் யாழ்ப்பாணம்**

**மனிதன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான் இது புற்றி வியாசரின் கருத்து?**

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் வீட்டுடன் ஒட்டிய தாய் கோழிக்கடை வைத்திருந்தார். திருமணம் முடித்து நீண்டகாலமாக அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அவரின் மனைவி போகாத கோவிலில்லை. செய்யாத நேர்த்தி இல்லை.

அவரின் வேண்டுதல் பலித்தது. அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தது.

ஆனால் பிறந்த அந்தப் பச்சிளம் குழந்தையின் கைகளில் ஒரு சிறு கறுப்பு மச்சம் போல தென்படவே அதை உற்றுப் பார்த்த அவருக்கு அதிர்ச்சி.

அந்த கறுப்பு மச்சம் பார்ப்பதற்கு கோழி இறகு போலவே இருந்தது.

அன்றுடன் அந்தத் தொழிலை விட்டு, வேறு தொழில் செய்யத் தொடங்கி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் பயணம்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு 3461 வாக்குகளை பெற்றேன்

**2010** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2013** — மாகாணசபை தேர்தலில் 10,034 வாக்குகள் பெற்று வடக்கு மாகாண சபைக்கு தெரிவானேன்

**2015** — பாராளுமன்றத் தேர்தலில் 17,300 வாக்குகள் பெற்று தேசியப்பட்டியலூடாக தெரிவானேன்

**2015** — யாழ், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு இணைத்தலைவராக நியமிக்கப்பட்டேன்

**2015** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்டேன்

**2018** — பிரதி விவசாய அமைச்சராக பொறுப்பேற்றேன், 140 நாட்கள் பிரதி அமைச்சராக கடமையாற்றினேன்

**2018** — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்

**2018** — யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியின் விசேட திட்டங்களின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டேன்

**2019** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டேன்



**2020** — பாராளுமன்றத் தேர்தலில் 36,365 வாக்குகள் பெற்று மாவட்டத்தின் அதிகூடிய விருப்பு வாக்கு பெற்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு தெரிவானேன்

**2020** — பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளராக நியமிக்கப்பட்டேன். இளவயதில் அப்பதவியை பெற்றுக்கொண்ட உறுப்பினராக விளங்கினேன்

**2020** — யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவராக ஜனாதிபதியால நியமிக்கப்பட்டேன்

**2024** — ஜனநாயக தேசிய கூட்டணியின் பிரதித்தலைவராக நியமிக்கப்பட்டேன்.

## 01.அடிப்படை வசதிநலன்

நிறைவான கிராமம்
**271,195**
பயனாளிகள்
793 திட்டங்கள்
ரூ 864,787,864 ஒதுக்கீடு

மலசல கூடம்
**914**
பயனாளிகள்
ரூ 65,500,000 ஒதுக்கீடு

மூளாய் கிராமத்துக்கு
**4 மில்லியன்**
ரூபாய் பெறுமதியில் நனோ தொழில்நுட்பத்துடன் கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வீட்டுத்திட்டம்
**3484**
வீடுகள்
ரூ 2,733,600,000 ஒதுக்கீடு

## 2. உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு நலன்

வீதி புனரமைப்பு
180 திட்டங்கள்
**321+ KM**

விளையாட்டு கழகங்களுக்கான விசேட உதவித்திட்டம் 2023
பயனாளிகள் **10,000**

விளையாட்டு மைதானம்
**30** திட்டங்கள்
ரூ 88,500,000 ஒதுக்கீடு

ஆலய புனரமைப்பு
**60** திட்டங்கள்
ரூ 6,000,000 ஒதுக்கீடு

## 03.விவசாயம் மற்றும் உற்பத்தி

வர்த்தக பயிர் விதைகள்
**1110 பயனாளிகள்**
ரூ 3,979,686 ஒதுக்கீடு

2 விவசாய களஞ்சியம்
ரூ 13,474,000 ஒதுக்கீடு

16 உற்பத்தி கிராமங்கள்
**1,292 பயனாளிகள்**
ரூ 100,000,000 ஒதுக்கீடு

விவசாய குளங்கள் புனரமைப்பு
**10 திட்டங்கள்**
ரூ 38,700,000 ஒதுக்கீடு

வீட்டுத்தோட்ட வாழ்வாதாரம்
(நாற்றுமேடை, வீட்டுத்தோட்டம், சேதனப்பசளை)
**1185 பயனாளிகள்**

Spray pump
**85 பயனாளிகள்**
ரூ 2,125,000 ஒதுக்கீடு



## 04.போருக்கு பின்னான மீள் குடியேற்றம் மற்றும் இழப்பீடுகள்

யுத்தத்தால் ஏற்பட்ட சொத்திழப்பு கொடுப்பனவு
**253 பயனாளிகள்**
ரூ 2,488,752 ஒதுக்கீடு

இலவச மின்சார இணைப்பு
**2005 வீடுகள்**
ரூ 45,000,000 ஒதுக்கீடு

நீண்டகாலமாக எமது மக்கள் எதிர்கொண்டிருந்த சட்ட ஆவணங்கள், பதிவுகள், இழப்பீடுகள் தொடர்பாக தீர்வுகளை பெற்றுக் கொள்ள கூடியவகையில் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவையை நீதி அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்தமை

வடக்கில் போரினால் அங்கங்களை இழந்த மற்றும் இதர காரணங்களால் அங்கங்களை இழந்த வறுமைப்பட்ட மக்களை கருத்தில்கொண்டு ஜெய்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாமை யாழ் மாவட்டத்தில் நடாத்தியமை.

## 05.பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி
**1500**
பயனாளிகள்

கிராமிய கைத்தொழில் ஊக்குவிப்பு
**424**
பயனாளிகள்

GLOCAL Fair
நடமாடும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்

வடமாகாண தொழில்துறை நிலையத்தின் சாயம் நிலையத்தை மேம்படுத்தல்
**150**
பயனாளிகள்

பற்றிக் பயிற்சி நிலையம்
**500**
பயனாளிகள்
ரூ 93,750,000 ஒதுக்கீடு

வாழ்வாதார திட்டங்கள்
**7289**
பயனாளிகள்

## 06.நிதி மற்றும் ஏனைய வளர்ச்சித்திட்டங்கள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்
**35000** பயனாளிகள்
**347** திட்டங்கள்
2018-2019 ரூ 20,000,000 ஒதுக்கீடு
2021 ரூ 10,000,000 ஒதுக்கீடு

150 மில்லியன் விசேட நிதி 2024
**35000**
பயனாளிகள்

3 மில்லியன் வேலைத்திட்டம் 2022
**80000**
பயனாளிகள்
ரூ 272,704,000 ஒதுக்கீடு


**2020 - 2024**

யாழ் இருப்பியல்

X 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## குப்பைகளைக் கொட்டுவதற்கு ஓர் இடத்தைத் தெரிவு செய்யுங்கள்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அநுரகுமாரதிஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அதன் தாக்கம் வடக்கு- கிழக்கு தமிழர் தாயகத்தில தான் அதிகம் தெரியுது.

**மூப்பர்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** எங்கட தமிழர் அரசியலிலும் "மாற்றம்" என்ற விடயம் தானே கோலோச்சுது.

எந்த வேட்பாளரைப் பார்த்தாலும் "மாற்றம்" என்பது பற்றித்தான் பேசுகினம்.

என்னைப் பொறுத்தவரையில ஜனாதிபதித்தேர்தலோட தென்பகுதியில எழுந்த மாற்றம் தமிழர் தாயகத்தில தான் அதிகம் பேசுபடுபொருளாகி இருக்குது.

**கங்காணி:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். ஆனால் எங்கட சனங்கள் இன்னமும் ஆருக்கு வாக்களிக்கிறதெண்டு முடிவு செய்யல்ல.

அவயளுக்கு இரண்டு ஆசனம் இவயளுக்கு ஒரு ஆசனம் எண்டு கதைக்கினமே தவிர, தாங்கள் ஆருக்கு வாக்குப் போடுகிற தென்பதில இன்னமும் முடிவு இல்லை.

**பண்டிதர்:-** சரி... சரி.. ஆறுதலாக முடிவெடுக்கட்டும். இப்ப எங்கட வேட்பாளர்கள் முகநூலிலும் இணையத் தளங்களிலும் தானே பிரச்சாரம் செய்யினம்.

**சாத்திரியார்:-** ... ஒற்றுமை இன்றேல் அனைவருக்கும் தாழ்வு என்ற உண்மையை வரப்போற தேர்தல் எங்கட தமிழ் அரசியல்வாதிகளுக்கு உணர்த்தும் என்பது தான் உண்மை.

**சிறாப்பர்:-** நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட அரசியல்வாதிகள் ஒற்றுமைப்படப்போவதில்லை. இது தான் நிலைமை.

எங்கட இனத்தின்ர உரிமை தொடர்பில நாங்கள் ஏதேனும் அரசாங்கத்தோட பேச்சு வார்த்தை நடத்துகிறதா இருந்தா அதற்குப் பலமான ஒரு மக்கள் இயக்கம் எங்களிட்ட இருக்க வேணும்.

**கங்காணி:-** மக்கள் இயக்கமோ போதுமையா. தமிழ் மக்கள் பேரவை உருவான போது எங்களில சிலர் அதற்கு எதிராக எவ்வளவு எழுதிச்சினம்.

அதிலும் புலம்பெயர் நாடுகளில இருக்கிற சில அமைப்புகள் பேரவையை முறியடிக்கிறதுக்காகச் செய்த துரோகத்தனங்கள் கொஞ்சமல்ல.

என்னைப் பொறுத்தவரை நாங்கள் சபிக்கப்பட்ட இனம்.

எங்களுக்கு எதிரிகள் வெளியில இல்லை. எங்களுக்குள்ளேயே இருக்கினம்.

அதாலதான் தந்தை செல்வநாயகம் சொன்னவர் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேணும் எண்டு.

**மூப்பர்:-** தெரியாமல் தான் கேட்கிறன் ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்க எங்கட இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கமாட்டாரோ.

**விதானையார்:-** பொய்ப் பிரச்சாரங்களைச் செய்து அரசாங்கத்தைக் கவிழ்க்கிறதுக்குச் சதி நடக்கிறதெண்டு ஜனாதிபதி அநுர கூறுகிற அளவில தான் நிலைமை இருக்குது. சிலவேளை அநுரகுமாரதிஸாநாயக்கவுக்கு எதிரானவர்கள் அனைவரும் ஒண்டு சேர்ந்தால் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை.

**வாத்தியார்:-** எதுவாக இருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வைத்திருந்த அரச வாகனங்களை திரும்ப ஒப்படைக்க வைத்த பெருமை ஜனாதிபதி அநுரவைத்தான் சாரும்.

அநுரகுமாரதிஸாநாயக்கவைத் தவிர வேற ஆராலும் மகிந்த ராஜபக்ஷவிட்ட இருந்து அரச வாகனங்களை மீளப் பெற்றிருக்க முடியாது.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மை தான். விடுதலைப் புலிகளிட்ட இருந்து நாட்டைக் காப்பாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பாதுகாக்கின்ற பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு எண்டு, நாமல் ராஜபக்ஷ கேட்கிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது பார்த்தியளோ.

**சிறாப்பர்:-** அரச வாகனங்களை மீள ஒப்படைக்கச் சொன்னது போல, வருமானத்திற்கு மேலதிகமாகச் சேர்த்த சொத்துக்களையும், கபளீகரம் செய்த சொத்துக்களையும் கொண்டு வந்து அரசாங்கத்திட்ட ஒப்படைக்க வேணும் எண்ட அறிவித்தலையும் ஜனாதிபதி அநுர விடுப்பாரோ.

**விதானையார்:-** ஜனாதிபதியாக அநுர வெற்றி பெற்றாலும் அவரின் கட்சி ஆட்சி அமைக்க வேணும்.

பாராளுமன்றம் அநுரவின்ர கைக்கு வந்தால் தான் எல்லாம் சாத்தியமாகும்.

**வாத்தியார்:-** சரி... சரி... அரசியலோட மட்டும் அலசாமல் எங்கட மக்கள் எதிர்நோக்குகிற பிரச்சினைகளைப் பற்றியும் ஆராயத்தானே வேணும்.

**சிறாப்பர்:-** வாத்தியார் சொல்லுறது உண்மைதான். எங்கட இடத்தில இப்ப இருக்கிற பெரிய பிரச்சினை கழிவகற்றல் தான்.

**பண்டிதர்:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** பண்டிதர் ஐயா, யாழ்ப்பாண மாநகர சபை பகுதியையும் காக்கைதீவு, ஆனைக்கோட்டை மற்றும் நவாலி வெளிப்பகுதிகளையும் ஒருக்காச் சுற்றிப் பாருங்க எங்கும் குப்பை கூழமாகக் கிடக்குது.

**விதானையார்:-** ஏன் சிறாப்பர் யாழ்ப்பாண மாநகரசபையில கழிவுப் பொருட்களை ஒப்படைக்கக் கூடிய இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்குதல்லோ. அப்ப வீதிகளில குப்பைகளைக் கொட்டாமல் உரிய இடங்களில ஒப்படைக்கலாம் தானே.

**மூப்பர்:-** அதையேன் கேட்கிறியள். தரம்பிரிக்கப்பட்ட குப்பைகளைத் தான் அங்க ஒப்படைக்க முடியும். அதால சனங்கள் அங்க கொண்டு போய்க் கழிவுப் பொருட்களை ஒப்படைப்பதைத் தவிர்க்கினம்.

**பண்டிதர்:-** வீதிகளில குப்பை கூழங்களைச் சனங்கள் கொட்டாமல் விடுகிறதாக இருந்தால், இரண்டு திட்டங்களை யாழ்ப்பாண மாநகர சபையும் இதர பிரதேச சபைகளும் நடைமுறைப்படுத்த வேணும்.

அதில ஒன்று கழிவுப் பொருட்களை ஒப்படைக்கக் கூடிய இடங்களில தரம்பிரித்துக் கொடுப்பது என்ற நிபந்தனையை நீக்கி, எந்தக் கழிவுப் பொருளாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேணும்.

இரண்டாவது, காக்கதீவு மற்றும் கல்லுண்டாய் வெளியில பொது மக்கள் குப்பைகளைக் கொட்டுவதற்காக ஓர் இடத்தைத் தெரிவு செய்து, அதனை அடையாளப்படுத்த வேணும்.

அப்படிச் செய்தால் சனங்கள் காக்கைதீவு, கல்லுண்டாய் வீதிகளில கொட்டுற குப்பைகளை உரிய இடத்தில போட்டிட்டுப் போவினம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார்கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

421

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## வளர்ந்து வரும் பிள்ளைகளில், பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவை...

வளர்ந்து வரும் பிள்ளைகளின் சத்திரசிகிச்சை சம்பந்தமான விடயங்கள் பற்றி பெற்றோர் அறிந்திருக்க வேண்டியது அவசியம். சிறு பிள்ளைகளில் ஏற்படும் ஹேர்னியா குறித்து நீங்கள் எல்லோரும் அறிந்ததே. அதேபோல், பொக்குளில் ஏற்படும் ஹேர்னியா மற்றும் விதைப்பையில் ஏற்படும் நீர்க்கட்டிகள் ஆகியவையும் முக்கியமாக அறிந்திருக்க வேண்டிய விடயங்களாகும். முதலாவதாக ஹேர்னியாவை எடுத்தால், ஹேர்னியா என்பது குடலின் சில பகுதிகள், சிறு பையினூடாக வயிற்றிற்கும் காலிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு கழலை போன்று காணப்படும் நிலை ஆகும். ஒரு ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்பே, விதையானது விதைப்பைக்குள் வந்து விடுகிறது.

அப்படி விதைப்பைக்குள் வரும் போது, அது வரும் பாதை குழந்தை பிறந்தவுடன் மறைக்கப்பட்டு விடும். சில குழந்தைகளில் அந்த பாதை மறையாது. இந்த பாதை தொடர்ச்சியாக இருப்பதால், அதனூடாக வயிற்றிலிருந்து குடற்பகுதிகள், நீர் என்பன விதையை நோக்கி வரலாம். அப்படி குடற்பகுதிகள் வரும் போது அதனை ஹேர்னியா என்று சொல்வோம்.

இந்த ஹேர்னியாவானது பெரியவர்களை விட சிறு பிள்ளைகளில் அதிகளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும். அதனால், சிறு பிள்ளைகளில் ஹேர்னியா காணப்படும் போது, கூடிய விரைவில் வைத்தியரை நாட வேண்டியது அவசியம். ஹேர்னியா சத்திர சிகிச்சை என்பது ஒரு சிறிய சத்திர சிகிச்சை ஆகும். இதில் முக்கியமானதொரு விடயம் என்னவென்றால், தொடர்ச்சியாக ஹேர்னியா காணப்படும் போது, குடல் கீழே இறங்கும் போது சடுதியாக சில மாற்றங்கள் ஏற்படும். அந்த மாற்றங்கள், குடல் முறுக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறு உருவாகும் குடல் முறுக்கத்தால், குடலிற்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால், குடல் பகுதி செயலிழந்து விடும். இதனால், செயலிழந்த குடல் பகுதியை அகற்றி, மீதமுள்ள குடல் பகுதிகளை ஒன்றுடன் ஒன்று தைக்க வேண்டிய நிலை ஏற்படும். இவற்றை தடுக்க வேண்டுமானால், ஹேர்னியா இருக்கும் போது, உடனடியாக வைத்தியரை நாட வேண்டும்.

ஹேர்னியாவானது, சில குழந்தைகளில் இரைப்பை பகுதியில் மட்டும் கழலை போன்று காணப்படலாம் அல்லது இரைப்பை பகுதியில் இருந்து விதை வரை அது கீழிறங்கக் கூடும். இப்படியான சந்தர்ப்பத்தில், பெரும்பாலும் குழந்தை அழும் போது அல்லது மலம் கழிக்கும் போது இந்தக் கழலை வெளித்தள்ளப்படுவதை நீங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். வெளித்தள்ளப்படும் கழலை தானாக உட்செல்லுமாயின் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது உட்செல்லவில்லை எனில் நீங்கள் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும். ஏனெனில் இது, குடல் முறுக்கத்தை ஏற்படுத்தும். வயது வேறுபாடின்றி எல்லா வயது பிள்ளைகளிலும் இந்த பிரச்சினை காணப்படலாம். இந்த ஹேர்னியா வந்த அனைவருமே சத்திர சிகிச்சை செய்து கொள்ள வேண்டியது அவசியம். ஏனெனில், மருந்துகளால் ஹேர்னியாவை குணப்படுத்த முடியாது.

அடுத்ததாக, விதையில் நீர்க்கட்டிகள் உருவாகலாம். ஹேர்னியா எப்படி உருவாகிறதோ அதேபோல் குடல் பகுதிகளுக்கு பதிலாக, வயிற்றிலுள்ள நீர் கீழிறங்கி விதைப்பைக்குள் வரும் போது, இந்த நீர்க்கட்டிகள் உருவாகின்றன. இவ்வாறான நீர்க்கட்டிகள் இருக்கும் போது பயப்பட வேண்டிய அவசியமில்லை. இது எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது. இந்த நீர்க்கட்டிகள் ஏற்பட்ட குழந்தைகளை, மூன்றரை வயது வரை அவதானித்தலில் வைத்துக்கொண்டால் போதும். மூன்றரை வயது பிந்தும் போதும் இந்த நீர்க்கட்டிகள் மறையவில்லை எனில், அவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம். ஹேர்னியா, நீர்க்கட்டிகள் இரண்டுமே ஒரே மாதிரியான தோற்றமுடையவை. நீங்கள் அவதானிக்கும் போது நீர்க்கட்டிகள் எந்த நேரமும் விதைப்பையில் காணப்படும். ஆனால், ஹேர்னியாவானது குழந்தை அழும் போது அல்லது மலம் கழிக்கும் போது மட்டுமே வெளித்தள்ளப்படும். எனவே இவற்றை இலகுவாக உங்களால் அடையாளம் காண முடியும்.



மூன்றாவது முக்கியமான பிரச்சினை, சிறு பிள்ளைகளின் பொக்குளில் ஏற்படும் ஹேர்னியா ஆகும். இதன்போது, வயிற்றினூடாக பொக்குளில் வெளித்தள்ளிய நிலையில் கழலைகள் காணப்படும். இது நாம் நினைக்கும் அளவிற்கு பாரதூரமானதொரு பிரச்சினை இல்லை. பிறந்தவுடன் எல்லா குழந்தைகளுக்குமே இந்த பொக்குள் ஹேர்னியா காணப்படும். சில குழந்தைகளுக்கு அது தானாகவே மறைந்து விடும். சில குழந்தைகளில் இந்த ஹேர்னியா தொடர்ந்து காணப்படும் போது குடல் பகுதிகள் உள்ளிறங்கி, குடல் முறுக்கம் ஏற்படும். தொடர்ச்சியாக இது காணப்படும் போது, குழந்தைகளும் அசாதாரணமாக உணருவார்கள். அவர்களுக்கு நோ தன்மையும் ஏற்படும். இந்த சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தல், வயிறு வீக்கம் போன்றவை காணப்படும். இவ்வாறு ஏற்பட்டால், உடனடியாக வைத்தியரை நாடி மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். இல்லையென்றால் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. குழந்தை வளரும் போது, வயிற்றுத் தசைகள் இறுக ஆரம்பிக்கும் சந் தர்ப்பத்தில், அந்த துவாரம் தானாக மூடி விடும்.

இத்தகைய ஹேர்னியா உடைய குழந்தைகளுக்கு, மூன்றரை அல்லது நான்கு வயது வரை எந்தவித சத்திரசிகிச்சையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நான்கு வயதாகும் போது, இந்த ஹேர்னியா மறைந்து விடும். இது அளவில் குறைந்து 5 மீற்றரிற்கு வரும் போது சத்திரசிகிச்சை செய்ய தேவையில்லை. ஆனால், சில குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக பொக்குளைச் சுற்றி நோ காணப்படும் போது அவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியது அவசியமாகும். இதைத்தவிர தொடர்ச்சியாக அந்த ஹேர்னியா வெளித்தள்ளியபடி இருக்குமாயின், சத்திர சிகிச்சை செய்யலாம்.

எனவே இவ்வாறான முக்கியமான விடயங்களை அறிந்து கொள்வதுடன், ஹேர்னியா சத்திர சிகிச்சை ஆபத்தானது என்ற தவறான மனப்பதிவை நீக்கிக் கொள்வது சிறந்தது.

**Dr. இரஞ்சிததர்சினி வசீகரன்,**
**குழந்தை நல சத்திரசிகிச்சை நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிபி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பிற்புலம் அல்லாமல் பிரதமராகிய ஹரினி அமரசூரிய



இலங்கையின் 9 ஆவது நிறை வேற்று அதிகார ஜனாதிபதித் தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது. பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று அநுரகுமார திஸா நாயக்க ஜனாதியாகத் தெரிவுசெய்யப்பட் டுள்ளார். இதனையடுத்து தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய இலங்கையின் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றில் 1960 இல் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க தேர்வு செய்யப்பட்டார். அவர் இலங்கையின் முதல் பெண் பிரதமர் மட்டுமின்றி, உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார். அவரைத் தொடர்ந்து 1994ஆம் ஆண்டு அவரது மகள் சந்திரிகா பண் டாரநாயக்க குமாரதுங்க சிறிது காலம் பிரதமர் பதவி வகித்ததுடன் பின்னர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பல வருடங்கள் பதவி வகித்தார். எனினும் இவர்கள் இருவ ருமே அரசியல் பின்புலம் உள்ளவர்கள். ஆனால் ஹரிணி அமரசூரிய எந்த குடும்ப அரசியல் பின்னணி ஏதும் இன்றி இந்த நாட்டில் வந்த முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இவர் 1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். கொழும்பு பிஷப் கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியை கற்றார். பின்னர் இந்தி யாவிலுள்ள டெல்லி பல்கலைக் கழகத்தில் சமூகவியல் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள மெக்குவாரி பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதன்பின்னர் எடின்பர்க் மற்றும் குயின் மார்கரெட் பல்கலைக்கழகத்தில் முனை வர் பட்டம் பெற்றார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பிரிவில் விரிவுரை யாளராக பணியாற்றி வந்த ஹரிணி அமரசூரிய, மெல்ல மெல்ல அரசியலை நோக்கி நகர்ந்தார். 2011 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% கல்விக்கு ஒதுக்கக் கோரி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு பலரின் கவனத்தையும் ஈர்த்தார்.

2012 - 2013 ஆகிய ஆண்டுகளில் திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தின் செயலாளராகவும், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும், 2016 இல் அச் சங் கத்தின் செயலாளராகவும் பணியாற்றி னார்.

'உலகின் முதல் பெண் பிரதமர் இலங்கையில் தேர்வு செய்யப்பட்டவரே. இலங்கையின் முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்ட பிறகு அவருடைய மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகப் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து அவரின் மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் பொறுப்பேற்றார். அதே ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு காணாத வாக்குகள் பெற்று ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். இந்த இரண்டு பெண்களும் ஒரே குடும் பத்தில் இருந்து வந்தவர்கள். ஏற்கனவே பிரதமர் பொறுப்பு வகித்து வந்த தங்களின் கணவர் அல்லது தந்தை இறந்த பின்னரே அந்தப் பொறுப்பிற்கு வந்தனர்'

### சமூகம் சார்ந்த பணிகள்

கடந்த 10 ஆண்டுகளாக, இலங்கை திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பிரிவில் சிரேஸ்ட விரிவுரை யாளராகப் பணியாற்றினார். 2016 முதல் பல்கலைக்கழக மானியக் குழுவின் பாலி னச் சமத்துவம் மற்றும் சமத்துவம் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறார். மற்றும் இலங்கையில் பெண்கள் மற்றும் பாலினம் குறித்த ஆராய்ச்சி நிறுவனமான CENWOR இல் பதவி வகித்துள்ளார். சமூக நலம், எயிட்ஸ் விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள் நலன் ஆகிய துறைகளிலும் ஆர்வலராக கடமையாற்றியுள்ளார். மேலும் அவர் இலங்கையில் உள்ள சமூக சுகாதார அமைப்பான Nestஇன் இயக்குநராகவும் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

### அரசியல் பிரவேசம்

2020 பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியில் வெற்றிபெற்று தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரானார். அன்று முதல் அந்தப் பதவியில் பணியாற்றி வருகிறார்.

அரசியலில் பெண்களின் பங்குபற்ற லானது குறைவாவே உள்ளது. மீறி வந் தால் வெறுப்புப் பேச்சுகளுக்கு உள்ளாகி அதிலிருந்து விலகுகிறார்கள். பல்வேறுபட்ட எதிர்ப்புக்களையும் சவால்களையும் தாண்டி இலங்கை அரசியல் வரலாற்றில் 2005 ஆம் ஆண்டுக்குப்பின்னர் 3ஆவது பெண் பிரதமராக தற்பொழுது தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இனி வருங்காலங்களில் இவரினை முன்னுதாரமாகக்கொண்டு பெண்கள் அரசியலில் பங்குபற்றலை அதிகரித்தால் அவர்கள் தமது திறனைப்பயன்படுத்தி நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கு விடை காண்பார்கள்.


**திருச்செல்வம் ஜனனி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## வாழ்க்கை தன்னலமற்ற அர்ப்பணிப்பா? தத்துவங்களின் அணிவகுப்பா?



பைபிளில் மாற்கு 10:46-52 பகுதி இன்று தரப்படுகின்றது. அக்காலத்தில் இயேசுவும் அவருடைய சீடரும் எரிகோவுக்கு வந்தனர். அவர்களும் திரளான மக்கள் கூட்டமும் எரிகோவை விட்டு வெளியே சென்றபோது பார்வையற்றிருந்த திமேயுவின் மகன் பர்த்திமேயு பல தடைகளைத் தாண்டி மேற்கொண்ட விடாமுயற்சியினால் பார்வை பெறுகின்றான்.

பர்த்திமேயு அவ்வழியோரம் அமர்ந்திருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவர் நாசரேத்து இயேசுதாம் போகிறார் என்று கேள்விப்பட்டு, "இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று கத்தத் தொடங்கினார். பேசாதிருக்கு மாறு பலர் அவரை அதட்டினர். ஆனால் அவர், "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று இன்னும் உரக்கக் கத்தினார். இயேசு நின்று, "அவரைக் கூப்பிடுங்கள்" என்று கூறினார்.

அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு, "துணிவுடன் எழுந்து வாரும், இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்"என்றார்கள். அவரும் தம் மேலுடையை எறிந்து விட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார்.

இயேசு அவரைப் பார்த்து, "உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?" என்று கேட்டார். பார்வையற்றவர் அவரிடம், "ரபூணி, நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்" என்றார். இயேசு அவரிடம், "நீர் போகலாம் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று, இயேசுவைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.

இந்த இடத்தில் நாம் படித்த, விடாமுயற்சியால் வெற்றி பெற்ற ஓர் இளம் தொழிலதிபரின் வாழ்வை கூறுவது நல்லது. சீனநாட்டைச் சார்ந்தவர் அவர். சோகங்களைச் சொத்துகளாக்கி தோல்விகளை தோளில் சுமந்து, புறக்கணிப்புக்களை மனதில் சந்தித்து, சீனாவின் மிகப் பெரிய பணக்காரர் ஆனவர். அவர்தான் அலிபாபா நிறுவனத்தின் நிறுவனர். அவர்தான் ஜாக் மா என்பவர். அவர் உலகின் 33 ஆவது கோடீஸ்வரராக 2016 ஆம் ஆண்டில் இருந்தார்.

தோல்விகளைக் கண்டு தயங்காத இவர் நமக்கு வியப்பை விதந்துரைக்கிறது. தொடர் முயற்சிகளை எடுக்க தவறாத இவர் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கின்றார். இவரின் வெற்றிக்கான பாதையில் மலர்ந்தவை பனி மலர்களல்ல மாறாகப் பாரிய முண் முடிகள். அவை ஒவ்வொன்றும் நமக்கு இன்று பசுமையான பாடங்கள்.

வெவ்வேறு வேலைகளுக்கு 30 முறைகள் விண்ணப்பித்த ஜாக் மா அவர்கள் 30இலும் தோல்வியடைந்தவர். KFCஇல் அன்று வேலைக்கு விண்ணப்பித்த 24 பேரில் ஜாக் மா மட்டுமே நிராகரிக்கப்பட்டவர். ஜாக் மா அவர்கள் கூறும்போது,"நான் ஆரம்ப பள்ளித் தேர்வில் 2 முறைகள் தோல்வியடைந்தேன், நடுநிலைப் பள்ளித் தேர்வில் 3முறைகள் தோல்வியடைந்தேன், கல்லூரி நுழைவுத் தேர்வில் 2முறைகள் தோல்வியடைந்தேன். பிறகுதான் பட்டம் பெற்றேன்" என்று தெரிவித்தார்.

ஜாக் மா அவர்கள் கல்லூரி நுழைவுத் தேர்வில் கணிதத்தில் 120 மதிப்பெண்ணுக்கு 1 மதிப்பெண் மட்டுமே எடுத்தவர். ஹார்வர்ட் (Harvard) பல்கலைக்கழகத்தால் 10 முறைகள் நிராகரிக்கப்பட்டவர். Alibaba இலாபம் இல்லாத தொழில் என முதலீட்டாளர்களால் கூறப்பட்டு முதலீட்டை பெறுவதற்கு நிராகரிக்கப்பட்டது. ஜாக் மா பொருள் விற்பனையாளர்கள் மற்றும் வாங்குவோர்களை இணைக்கும் Alibaba என்ற நிறுவனத்தை 1998 ஆம் ஆண்டில் தொடங்கினார். அவர் பல தோல்விகளால் பாதிக்கப்பட்டார். அந்த Alibaba எந்தவித இலாபத்தையும் மூன்று ஆண்டுகள் வரை ஈட்ட வில்லை.

ஜாக் மா Alipay என்ற நிகழ்நிலை பணப் பரிவர்த்தனை இணையத்தைத் தொடங்கியபோது அவரின் எண்ணம் முட்டாள் தனமானது என்று கூறினார்கள். உலகம் முழுவதும் இன்று அதிகமான நிகழ்நிலை பணப் பரிவர்த்தனைகள் Alipay மூலமே நடைபெறுகின்றன என்பது வர லாறு.

வாழ்க்கை என்பது பல்வேறு முயற்சிகளால் கட்டப்பட்டுள்ளது. அந்த முயற்சிகளை நாம் சிறப்பாக எடுக்கும்போது நாம் சிறகடித்துப் பறக்க முடியும். வாழ்க்கையில் தயங்காமல் தளராமல் விடாமுயற்சியோடு போராடி இயேசுவைச் சந்தித்த பார்வையற்ற பர்த்திமேயுவை இன்றைய இறைவார்த்தைகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. வாழ்க்கை தோல்விகளில் கற்றுக் கொள்வதா? வெற்றிகளில் பெற்றுக் கொள்வதா? முயற்சிகள் தோற்றுப் போகலாம். முயற்சிகள் எடுக்கத் தோற்றுப் போகக்கூடாது.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

# லொஹான் ரத்வத்தவின் பாதுகாப்பு வாகனம் விபத்து



(கொழும்பு)

அநுராதபுரம் - வாரியபொல பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்தவின் ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தானது வாரியபொல - தங்கஹமுல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

லொகன் ரத்வத்த பயணித்த காரின் பின்னால் பயணித்த டிஃபென் டர் ரக கார், முச்சக்கர வண்டி ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த கார் வீதியை விட்டு விலகி பேருந்து தரிப்பிடத்தில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தால் பேருந்து தரிப்பிடம் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது வாகனத்தில் உரிமம் பெற்ற இரண்டு ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகள் மற்றும் ஒரு கைத்துப்பாக்கி காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர்.(நி-8)

# படகின் இணைப்பு இயந்திரம் வடமராட்சியில் மீட்பு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடி காட்டுப் பகுதியில் நேற்று படகு ஒன்றின் வெளி இணைப்பு இயந்திரம் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

ஆழியவளையைச் சேர்ந்த நபர் ஒருவர் நாவல் பழம் பறிப்பதற்காக காட்டு பகுதிக்கு சென்ற வேளை மணலில் புதையுண்ட நிலையில் 25 குதிரைவலு கொண்ட வெளி இணைப்பு இயந்திரத்தை கண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவருக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் வெளி இணைப்பு இயந்திரத்தை மீட்டு, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்-புனர்பூசம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:TO(gov)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/14887 | பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா-57<br>8இல் செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி,Engineer<br>எதிர்பார்ப்பு:Engineer,Doctor, Accountant<br>தொ.இ: G/11319 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:0<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: BSc,Production Planner(pvt)<br>எதிர்பார்ப்பு-உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/14888 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்:A/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14889 | பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:36 3/4<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:BA,DO<br>எதிர்பார்ப்பு:தகுந்தவரன்,விவாகரத்தானவர்<br>தொ.இ: G/14185 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல்களை ஆரம்பித்தது இஸ்ரேல்!

(ஜெருசலேம்)

**ஈரானில் உள்ள பல இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் நேற்றுக் காலை வான்வழித் தாக்குதலை நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**



ஒக்டோபர் 1ஆம் திகதி ஈரானின் கிட்டத்தட்ட 200 ஏவுகணைத் தாக்குதல்கள் மீதான தாக்குதல் உட்பட, பல மாதங்களாக ஈரானிய ஆட்சியின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் தெரிவித்துள்ளன.

அதன்படி ஈரான் தலைநகரின் மேற்கு மற்றும் தென்மேற்கில் அமைந்துள்ள இராணுவத் தளங்களை குறிவைத்து இந்த வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும் தாக்குதல்களின் குறிப்பிட்ட இலக்குகள் குறித்து இஸ்ரேல் இன்னும் தெளிவான அறிக்கையைவெளியிட வில்லை.

இதற்கிடையில் ஈரானைத் தவிர சிரியாவின் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் உள்ள சில இராணுவ நிலைகளை இஸ்ரேல் குறி வைத்துள்ளதாக சிரிய அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-8)

## ஈரான் பதில் தாக்குதலில் ஈடுபடக்கூடாது

## அமெரிக்கா-பிரிட்டன் கோரிக்கை



(வோஷிங்டன்)

இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரான் பதில் தாக்குதலை மேற்கொள்ளக்கூடாது என அமெரிக்காவும் பிரிட்டனும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஈரான் மீண்டும் பதில் தாக்குதலை மேற்கொண்டால் நாங்கள் அதற்கு தயாராகவுள்ளோம். ஈரான் மோசமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என ஜோ பைடன் நிர்வாகத்தின் சிரேஸ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது இடம்பெறுவதை அமெரிக்கா விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிற்கும் ஈரானிற்கும் இடையிலான நேரடி மோதல் இத்துடன் முடிவடையவேண்டும் என தெரிவித்துள்ள அவர் லெபனானிலும் காசாவிலும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளிற்கு அமெரிக்கா தலைமை தாங்குகின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஈரான் பதில் தாக்குதலை மேற்கொள்ளக்கூடாது என பிரிட்டிஸ் பிரதமரும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரானின் வன்முறைக்கு எதிராக பதில் நடவடிக்கை எடுப்பதற்கு இஸ்ரேலிற்கு உரிமையுள்ளது என தெரிவித்துள்ள அவர் பிராந்தியத்தில் மேலும் நிலைமை தீவிரமடைவதைத் தவிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-8)

## வான் பரப்பை மூடியது ஈராக்




(பக்தாக்)

ஈரானில் உள்ள இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் காலை தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் ஈராக் அரசு தமது வான்பரப்பை மூடுவதாக அறிவித்துள்ளது.

அத்துடன் விமானப் போக்குவரத்தினையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக அறிவித் துள்ளது.

இஸ்ரேலும் ஈரானும் தங்களது வான்பரப்பை மூடியுள்ள நிலையில் ஈராக்கும் தமது வான்பரப்பை மூடிவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## இராசிபலன்

27.10.2024
ஐப்பசி 10, ஞாயிற்றுக்கிழமை
தசமி முற்பகல் 8.55 மணிவரை

மகம் பிற்பகல் 4.04 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

சந்திராஷ்டமம் - பூராடம், உத்தராடம்

வளவன்




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுயமுயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.




தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும், வழிபாடு முன்னேற்றம் தரும்.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,போசன சுகமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், போசன சுகமுண்டு.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




வருமானம் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், கௌரவமான நாள்.




தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள் , தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பல முறை யோசித்து செய்வது நல்லது, தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், கௌரவமான நாள்.

ஒருவன் தான் செய்த தவறுகளை ஒப்புக்கொள்ள வெட்கப்படக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உள்ளத்தின் உணர்வுகள் உண்மையாக இருப்பின் மனதின் எண்ணங்களும் சரியாகவே இருக்கும்.
>
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஏழை மக்களின் வாழ்வாதாரத்துக்கு புலம்பெயர் தமிழர் உதவ வேண்டும்

அரசியல்வாதிகளை நம்பி எந்தப்பயனும் இல்லை என்பது உறுதியாயிற்று. அதேநேரம் அரசியலை புறந்தள்ளி வைக்கவும் முடியாது.

ஆக தமிழர் அரசியல் ஒரு புறமிருக்க, நாம் நாமாக எழுந்து நிற்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதுதான் புத்திசாலித்தனம்.

உண்மை. நாங்கள் பாராளுமன்றம் சென்றால் – எங்களைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்பது தொடக்கம் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான அத்தனையையும் பெற்றுத் தருவோம் என்பதாக வேட்பாளர்கள் உறுதிமொழி வழங்குவர்.

அத்தகைய உறுதிமொழிகளை மக்களும் நம்புவர்.

உண்மையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் அதிகாரம் எத்தகையது என்பதும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரால் பாராளுமன்றத்தில் பேசுவதைத் தவிர, அவரால் வேறு எதனையும் செய்ய முடியாது என்பதும் நாம் அறிந்ததே.

இருந்தும் தேர்தல் என்று வந்துவிட்டால், மக்களை வாலாயப்படுத்துகின்ற வகையில் வேட்பாளர்கள் ஆசாட வார்த்தைகளை முன்வைப்பர். இது காலாகாலமாக நம் மண்ணில் நடக்கின்ற தேர்தல் கலாசாரம்.

தவிர, இலங்கைப் பாராளுமன்றத்துக்கு சென்ற நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்த சாதனை என்ன என்பதும் அவர்களால் ஏழை மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் எவை என்பதும் நாம் அறியாததல்ல.

எனவே தமிழ் அரசியல்வாதிகளால் நம் ஏழை மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கும் என யார் நினைத்தாலும் அதைவிட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்காது.

ஆக, நாமே நம் மக்களின் அவலத்தை – அவர்களின் ஏழ்மையை இல்லாது செய்யப் பாடுபட வேண்டும்.

அந்தவகையில், ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு எங்கள் புலம்பெயர் தமிழ் மக்கள் தம்மாலான உதவிகளைச் செய்வது அவசியம்.

இங்கு வாழ்வாதாரம் என்பது உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்குவதோ அன்றி தையல் இயந்திரம், ஆடு, மாடு, கோழி என்பவற்றில் ஒன்றை இரண்டைக் கொடுப்பதையோ நாம் குறிப்பிடவில்லை.

மாறாக, அவர்களின் சீவனோபாயத்துக்கு மாதாந்தம் வருமானம் தரக்கூடியதான தொழில் முயற்சிகளை வகைமைப்படுத்தி; அவரவருக்கு ஏற்றாற்போல் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான வளங்களை – முதலீடுகளை வழங்கி, அவர்களை தொழில் முயற்சியாளர்களாக ஆக்க வேண்டும்.

இதில் விவசாயம், கடற்றொழில், வீட்டுக் கைத்தொழில், உணவுப் பண்டங்களை ஆக்குதல், தானியங்களை உணவுக்குத் தயார்படுத்துகின்ற அரைக்கும் ஆலைகள் போன்றவாறான தொழில் முயற்சிகளுக்கு நம் புலம்பெயர் தமிழ் மக்கள் உதவ வேண்டும்.

இதைவிடுத்து 25 கோழிக்குஞ்சு, ஒற்றைப் பசுமாடு, ஒற்றை மறி ஆடு, ஒரு தையல் இயந்திரம் என வழங்கப்பட்ட வாழ்வாதார முறைமைகள் தோல்வியில் முடிந்து போனதை நமக்கான முன் அனுபவமாகக் கொண்டு ஒரு புதிய பாதையில், ஏழை மக்களுக்கான தொழில் சார் முயற்சிகளை அறிமுகப்படுத்தி அதனூடு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

# வெளிநாட்டுப் புலனாய்வுத் தகவல்களை கண்காணிக்க 3 குழுக்கள் நியமனம்

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் தொடர்பாக வெளிநாட்டுப் புலனாய்வுச் சேவைகள் வழங்கும் தகவல்களை 24 மணிநேரமும் கண்காணிப்பதற்காக, மூன்று தனித்தனி புலனாய்வு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக, அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் புலனாய்வு அறிக்கைகளை ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உடனடியாக தகவல்களை அனுப்பி, அந்த அறிக்கையின்படி உரிய நடவடிக்கை எடுப்பதுவே, இந்தக் குழுக்களின் பொறுப்பாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டுப் புலனாய்வு பிரிவினர் வழங்கிய அறிக்கைகள் உரிய முறையில் ஆய்வு செய்யப்படவில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் தலைவர்கள் இந்த புதியப் பொறிமுறைக்கான பணிப்புரைகளை வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

சுற்றுலாப் பகுதிகளில் இஸ்ரேலியர்களைத் தாக்கும் திட்டம் தொடர்பான தகவலை, இந்திய உளவுத்துறை சமீபத்தில் வெளியிட்டது.

இந்தத் தகவல் வெளியானதையடுத்து, சுற்றுலாப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்க அரச பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்தனர்.

தாக்குதல் திட்டம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தொடர்புடைய ஏனையோரை கைது செய்ய பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினரால் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்நாட்டின் சுற்றுலாப் பகுதிகளில் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து நடத்தத் திட்டமிடப்பட்ட தாக்குதல் நடவடிக்கை தொடர்பான மேலதிக உண்மைகளை வெளிக்கொணர உளவுத்துறை அதிகாரிகள் குழுக்கள் இந்த நாட்களில் செயற்பட்டு வருகின்றன.

இதேவேளை, நாட்டின் சுற்றுலாப் பகுதிகளுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ம-7)

## பொதுத் தேர்தலில் திருநங்கை போட்டி

(கொழும்பு)

இலங்கை சோசலிச கட்சியின் மகளிர் விவகார செயலாளர் சானு நிமேஷா, இலங்கைத் தேர்தலில் போட்டியிடவுள்ள முதல் திருநங்கை என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.

இவர், நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில், கேகாலை மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்த இலங்கை சோசலிசக் கட்சிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முதன்முறையாக தேர்தலில் போட்டியிட திருநங்கை ஒருவரை நிறுத்தியதன் மூலம் சரித்திரம் படைத்தேன் என, நிமேஷா ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ம-7)

## ஆட்டோ மோதியதில் பாதசாரி உயிரிழப்பு

(இர்த்தினபுரி)

அவிசாவளை - இரத்தினபுரி வீதியில் அவிசாவளை நகரத்தில் இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (25) இரவு இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையிலிருந்து இரத்தினபுரி நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பாதசாரி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் அவிசாவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, முச்சக்கரவண்டி சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

### மொனராகலையில்

## சுமார் 3 இலட்சம் கஞ்சா செடிகளுடன் இருவர் கைது

மொனராகலை, கொனகங்ஆர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா செடிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் புத்தல பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தல பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மித்தெனிய மற்றும் பதலங்கல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 42 மற்றும் 57 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 310,000 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொனகங்ஆர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## இரத்தினபுரியில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எம்பிலிப்பிட்டிய - செவனகல வீதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரக்கறிக் கடை ஒன்றின் மீது மோதி பின்னர் அருகிலிருந்த மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எம்பிலிப்பிட்டியிலிருந்து செவனகல நோக்கிப் பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது, காரில் பயணித்த சாரதி உட்பட ஐந்து பேர் காயமடைந்துள்ள நிலையில் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் 6 வயது சிறுவன் பலி

அத்தனகல்ல அலவல பிரதேசத்தில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த 6 வயது சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளான்.

அத்தனகல்ல அலவல பிரதேசத்தைச் சேர்ந்த தரம் 01 இல் கல்வி கற்கும் தேஜான் தினுவர என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதுடன், உயிரிழந்த சிறுவன் எப்போதும் மின்சார விளையாட்டுப் பொருட்களில் விளையாடுவதை விரும்பக்கூடியவர் என தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனுக்கு மின்சாரம் தாக்கிய போது, சிறுவனின் தாயும் தந்தையும் வீட்டில் வேறு வேலையில் ஈடுபட்டிருந்த நிலையில் குளிர்சாதனப் பெட்டிக்கு அருகில் சிறுவன் கிடப்பதைக் கண்டு வத்துப்பிட்டிவல ஆதார வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ம-7)

## மிருசுவிலில் ரயிலுடன் ஹயஸ் மோதி விபத்து

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ரயில் கடவையில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் ரயிலுடன்-ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹயஸ் வாகனம் ஏ9 வீதியில் இருந்து தவசிகுளம் வீதிக்குச் செல்ல முற்படுகையில் யாழில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற புகையிரதம் மோதி இவ் விபத்து நேர்ந்துள்ளது.


இருப்பினும் மேற்படி விபத்தில் ஹயஸ் வாகனத்தின் பின்பக்கமாக ரயில் மோதியதால் வாகனச் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

அபாய சமிக்ஞை விளக்கு உள்ள கடவையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7.30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி நாகரத்தினம் பரமேஸ்வரி

ஞானிமடம் பூநகரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் பரமேஸ்வரி அவர்கள் 26.10.2024 நேற்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சங்கரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலத்தின் அருமைச் சகோதரியும் சந்தானலட்சுமி, புவனேந்திரன் (தமிழிந்திரன் - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்), ஸ்ரீரஞ்சினி (கறுக்காய்த்தீவு மகா வித்தியாலயம்), ஜெயந்தி(UK), ருக்மணி(பூநகரி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் முருகமூர்த்தி (உப தபாலதிபர்), சிவரூபன்(இ.போ.ச சாரதி), ஜெயசீலன்(பூசகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் குகேந்திரன், சுரேந்திரன்(வவுனியா), புவீந்திரன் (நில அளவையாளர்), கலைமதி(தீபா - ஆசிரியை), தேவாஜினி(மாணவி - A.T.I), பிருந்தாயினி(கொழும்புப் பல்கலைக்கழகம்), மதுராயினி(யா/ இந்து மகளிர் கல்லூரி - மாணவி), தக்ஷி(சுவிஸ்), பானுஜன், ரேணுஜன், ஜெயராம், ஜெயஆருஜன், ஜெயஅஸ்வின் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் சித்தங்குறிச்சி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 772 7398
077 284 8223

(489)

தகவல்:
பிள்ளைகள்

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
10
08
2004

ஆண்டவன் அடியில்
30
10
2021

அமரர்
## செல்வி வர்சிகா ரஞ்சன் சர்மா

*இறந்த திதி : தசமி 27.10.2024*

அன்புமகளே, ஆசைமகளே,
பாசமான சகோதரியே
உன் இழப்பில் கதி கலங்கி கண்ணீா உதித்து
மூன்றாண்டு சென்றுவிட்டதே – ஆனாலும்
கண்களில் நின்று கண்ணீா ஓயவில்லை
உன் நினைவும் எம் மனக் கண்முன் நின்று
மறையவே இல்லை
நின் பெருமையெல்லாம் மண்ணுக்குள்
புதைந்து விட்டது என்று எண்ணினோம்
ஆனால் நீ எல்லோரினதும்
உள்ளத்திலும் ஒளிர்கின்றாய்

(487)

4 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

என்றும் ... குடும்பத்தினர்

# தேர்தல்களம்




## எனது இலக்கு ஒன்றே; அதுவே இனத்தின் விடுதலை

### சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி சுகாஷ்



எந்தக் களத்திலும் விலை போகாது சலுகைகளுக்கு அடிபணியாது தடம்மாறாது "தமிழ்த் தேசியத்தின் பாதையில் பயணிப்பேன்" என யாழ்.மாவட்டத்தில் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் க.சுகாஷ் தெரிவித்தார்.

நீங்கள் எனக்கு அங்கீகாரம் தந்தால் தமிழினத்தின் விடுதலைசார் - உரிமைசார் அரசியலுக்கு முதலிடம் வழங்குவேன். அத்துடன் தமிழ்த் தேசத்தின் தற்சார்புப் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்த்து, மாவீரர் குடும்பங்களுக்கும் அங்கவீனமுற்ற முன்னாள் போராளிகளுக்கும் முன்னுரிமை வழங்குவதுடன், ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசத்திலும் வறுமை என்பது மாணவர் களின் கல்வி,விளையாட்டு, போஷாக்கு ஆகியவற்றுக்குத் தடையாக அமையக்கூடாது என்பதன் அடிப்படையில் அதியுச்ச நேர்மையோடு செயற்படுவேன் என்ற உத்தரவாதத்தை இத்தால் வழங்கி நிற்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

(நி)

## தமிழரசுக்கட்சி அலுவலகம் முல்லையில் திறந்து வைப்பு

(நெளுக்குளம்)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் சட்டத்தரணி செல்வராஜ் டினேசனின் தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வானது நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

அத்துடன் அலுவலகம் திறந்த பின்னர் முல்லைத் தீவு மற்றும் விசுவமடு பகுதி கிராமங்களில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

(6-8-299)

## சுயேட்சைக்குழு-12 தேர்தல் அலுவலகம் திறப்பு



யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழு 12இன் தேர்தல் பிரசார அலுவலகத் திறப்பு விழா கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள முதன்மை வேட்பாளர் என்.பி ஸ்ரீந்திரன் இல்லத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

மறவன்புலோ க.சச்சிதானந்தம் தலைமையில் இடம் பெற்றிருந்த இந் நிகழ்வில் நந்திக்கொடி ஏற்றி வைத்து நாடாவெட்டி அலுவலகத்தை திறந்து வைத்ததுடன் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வும் இடம்பெற்று இருந்தது.

(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்திருந்தவர்...

வீதி, கேணியடிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிறிராகுலன் (வயது-79) என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பொதுச் சுகாதார பரிசோதகரும் நேற்று டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்புக்காக மேற்குறித்த பகுதியில் உள்ள வீட்டிற்குச் சென்றனர்.

இதன்போது குறித்த முதியவர் துவிச்சக்கரவண்டி மீது விழுந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இந்நிலையில் இதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்புக் காரணமாகவே குறித்த மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## சசிகலா வீட்டின்...

யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சசிகலா ரவிராஜின் வீட்டிக்கு அயல் வீட்டில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளரான பெண் ஒருவரினாலேயே இந்தக் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் குறித்த பெண்ணினால் தான் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாகவும் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-7,33)

## யாழ் தேவி...

தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான யாழ் தேவி தொடருந்து சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் யாழ்.புகையிரத நிலைய நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு இது வரை எவ்வித அறிவித்தலும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்திருந்தனர். (ம-7)

## கிணற்றில்...

வடமராட்சி பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்குப் பின்புறமாக உள்ள பாவனையில்லாத கிணற்றில் இருந்தே கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கொட்டடி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு பின்புறமாக உள்ள பற்றைக் காணி நேற்று சனிக்கிழமை துப்புரவு செய்யப்பட்டது.

அப்போது அந்தக் காணிக்குள் இருந்த பாவனையில்லாத கிணறைத் துப்புரவாக்கும்போது 11 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு குண்டு செயலிழக்கும் குழுவினரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## கரந்தனில்...

பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் நேற்று மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன்போது முச்சக்கரவண்டியில் வந்த நால்வர் அடங்கிய குழு ஒன்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. இந்நிலையில் அவர்கள் அந்தத் தாக்குதலை எதிர்த்தனர்.

இந்நிலையில் திரும்பிச் சென்ற குழு சுமார் 30 பேர் அடங்கிய குழுவினரை அழைத்து வந்து அங்கு பிரசாரத்தில் ஈடுபட்ட பெண்கள் உட்பட 8 பேர் மீது மீண்டும் கொலைவெறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்நிலையில் கொடூரத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு பெண் உட்பட மூவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பெண் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலும் ஏனைய இருவரும் 24ஆம் இலக்க விடுதியிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## அடுத்த...

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களையும் அடுத்த வருடத்திற்குள் நடத்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வலுவான அமைச்சரவை, பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வலுவான அரசியல் பொறிமுறை மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிர் கொடுக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்தல்...

ஒதுக்கப்பட்ட நாளில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அந்தச் சட்டத்தின்படி, ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 11ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்குக் குறையாமலும் ஏழு வாரங்களுக்கு மிகையாகாமலும் வாக்கெடுப்புக்கான திகதியை நிர்ணயிக்க வேண்டும் என்று, சட்டம் தெளிவாகக் கூறுகிறது என்று, நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதன்படி, வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த ஒக்ரோபர் 11ஆம் திகதி முதல் கணக்கிடப்படும் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் மாதம் 14ஆம் திகதி, சட்டக் காலத்தில் இடம்பெறாததால், அன்றைய தினம் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது எனவும், அவர்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம-7)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை நேற்றைய தினம் சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 71.78 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.05 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்று 2.56 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (ம-7)

## மரத்திலிருந்து...

ழுந்துள்ளார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் காளிதாஸ் (வயது-36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மரத்தில் இருந்து தவறிவீழ்ந்து படுகாயமடைந்திருந்தார். யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று சோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024
வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதி

வன்னியின் செல்வி
மக்களின் செல்வி



(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி)

**சின்னத்துரை கலாநிதி**

அரசியல் பட்டம் பேராதனைப் பல்கலைக்கழகம்

செய்வோம் செய்து முடிப்போம்

## மொத்தக் கொள்வனவு
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (484)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

50/= ~~80/=~~

077 773 0900

## விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:

075 033 6759 (402)

## SALE
**Adjustable Bed**

3 மாதங்களே பயன்படுத்திய நல்ல நிலையில் உள்ள Adjustable Bed (கட்டில்) விற்பனைக்குண்டு. (433)

தொடர்புகளுக்கு : 077 0780 240

## தேவை
கல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பிப்பதற்கு மூன்று அறை கொண்ட வீடு அல்லது 2500 sqft விஸ்தீரணம் கொண்ட இடம் உடன் தேவை.
K.K.S வீதி அருகில் அல்லது K.K.S வீதிக்கு கிட்டிய தூரத்தில் இருப்பது விரும்பத்தக்கது.

076 897 6665
070 686 7695 (486)

## IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Practical to UKVI on Computer

(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (2508)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## பணிப்பெண் தேவை
திருகோணமலை நகரப் பகுதியில் தமிழ் இந்து வீடொன்றில் நீண்ட காலத்திற்கு தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு வேலைகள் செய்வதற்கு ஓரளவு கல்வித் தகைமை கொண்ட, வீட்டு வேலைகள் செய்வதில் முன் அனுபவமுள்ள பெண் தேவை. தனிநபர் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். வயது 35 தொடக்கம் 45 க்கு இடைப்பட்டவர்கள். (482)

தொடர்பு : 070 2257 757

## லலிதா றெக்ஸ் ஸ்ரீ லலிதா பெசன்
நவீன ஆடைகளின் சாம்ராச்சியம்
இம்முறை சிறப்பு விலைக்கழிவுகளுடன் சிறந்த தரத்துடன் கூடிய

1. சல்வார்
2. சாறிவகை
3. Skirt and Blouse
4. வேட்டி வகைகள்



எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

தீபாவளியை எமது விலைக்கழிவுடன் கொண்டாடி மகிழுங்கள்

(C-1459)

இல.5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P 021 222 5260 | இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P 021 222 4003

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு

UK 1400/= France 2300/= Germany 2100/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**TCN Express**

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | 208, Galle Road, Colombo 06.

(486) T.P - 077 755 4528

## நீங்களும் விரைவில் அமெரிக்காவில்...இன்னும் சில நாட்களே உள்ளன
### அமெரிக்க அதிஸ்ட விசா
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0777469777 | 0743900350 | 0743900352 | 0768226237 | 0743900353 | 0743900351 |
| 0764550673 | 0768226240 | 0768226243 | 0777088777 | 0777720322 | 0764550675 |
| 0768226242 | 0768226238 | 0777726322 | 0764550674 | 0764550670 | 0777718322 |
| 0764550671 | 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | 0768226230 | 0776697960 |

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 236/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 277/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1Kg றவை | - 284/= |
| 1Kg உளுந்தம் பருப்பு | - 780/= |
| 1Kg மல்லி | - 380/= |
| 1Kg பயறு | - 655/= |
| 1Kg சோயா | - 440/= |
| 10Kg விஜிதா குத்தரிசி | - 2530/= |
| 750 ml நல்லெண்ணை | - 1460/= ~~1550/=~~ |
| 400g சன்ரயன் | - 3525/= ~~3900/=~~ |
| 180 ml Chik சம்போ | - 420/= ~~480/=~~ |
| 1Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 320/= ~~380/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 390/= ~~500/=~~ |


400g Anchor 1000/= ~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும் (484)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket 0777 8080 30

## ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
## பாராளுமன்ற தேர்தல் - 2024
### வன்னித் தேர்தல் மாவட்டம்



~~1~~ 2 3 4 5 6 7 8 9

## தி.இடபாரூடன்
மல்லாவி பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்



எங்கள் வன்னி
எங்கள் மக்களுக்கு

## MARD
ஞாயிறு முதல் செவ்வாய் வரை | 27,28,29 10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1150~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3385~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 ~~1150~~ 5kg Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

(C-1461)

... 345 மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.